பக்கங்கள்: 19 விலை : 30/-

காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir


விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 10 ஞாயிற்றுக்கிழமை 26.09.2021 கதிர் 325

## இது ரகசியம் அல்ல!

சாதித் திமிர் பிடித்தவர்கள் அதிகம் ஆசாரம், மடி பார்ப்பார்கள். பார்த்தால் குற்றம். தொட்டால் தீட்டு. முட்டினால் குற்றம். நெருங்கினால் ஆசௌசம் என்று பல அர்த்தங்களில் தீண்டத் தகாத விடயங்கள் உண்டு.

இந்தத் தொட்டால் பக்கம்02

# இளையோர்களே தமிழரின் நம்பிக்கை நட்சத்திரங்கள்!



## எமது விடுதலைக்காக நிறையவே சாதிக்கவேண்டும் என்கிறார் விக்கி

இளையோர்கள் எமது நம்பிக்கை நட்சத்திரங்கள். உங்களிடம் எமது மக்கள் நிறைய எதிர்பார்க்கின்றார்கள். உங்கள் செயற்பாடுகளை நிறுவன மயப்படுத்தி அறிவை ஆயுதமாகப் பயன்படுத்தி எமது விடிவுக்காக நீங்கள் நிறையவே சாதிக்க முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 19

## நேற்று தொற்று 1,146

இலங்கையில் நேற்று 1,146 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் 2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றுமுழுதாக நீக்க வேண்டும்!

### ஐரோப்பிய ஒன்றிய குழுவினரிடம் நேரில் வலியுறுத்துவோம் என்கிறார் சுமந்திரன்



இலங்கைக்கு வரும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை சந்திக்கின்றபோது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்று முழுதாக நீக்கவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துவோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் 2

## வவுனியாவில் அறுவர் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 6 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் 2

## இலங்கை – இந்திய கடற்படை உயரதிகாரிகள் சர்வதேசக் கடலில் கப்பலில் நாளை சந்திப்பு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.26

இலங்கை – இந்திய கடற்படை அதிகாரிகள் சர்வதேச கடற்பரப்பில் கப்பலில் சந்தித்து நாளைய தினம் நேரடிப் பேச்சுகளில் ஈடுபடவுள்ளனர்.

இலங்கையின் வடமாகாண கடற்படைக் கட்டளைத் தளபதி மற்றும் யாழ்ப்பாணத் தளபதிகள் காங்கேசன்துறை துறை முகத்தில் இருந்து இந்தப் பேச்சிற்காக கப்பலில் சர்வதேச எல்லைக்கு பயணிக்கின்றனர்.

இதன்போது இந்தியாவின் (தென் பிராந்திய) தமிழ்நாடு மற்றும் கேரள மாநில கடற்படை தளபதிக அடங்கிய குழுவினர் இதே பகுதிக்கு இந்திய கடற்படை கப்பலில் வருகை தரவுள்ளனர்.

இவ்வாறு சர்வதேச 19

## நாட்டில் மேலும் 79 பேர் பலி!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 79 பேர் சாவடைந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 609 ஆக அதிகரித்துள்ளது. 2

## ஒக்டோபர் முதலாம் திகதி நாட்டை மீண்டும் திறக்க வாய்ப்பில்லை!

### ரணில் நம்பிக்கை



அரசு எதிர்பார்த்துள்ளமைக்கு அமைய நாட்டை ஒக்டோபர் முதலாம் திகதி மீண்டும் திறக்க வாய்ப்பில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச வர்த்தக சபையுடனான கலந்துரையாடலில் பேசும் போதே அவர் இதனைக் கூறினார்.

நாட்டை மீண்டும் திறப்பது ஒக்டோபர் நடுப்பகுதி 2

## கோட்டாபய நாடு திரும்பிய பின்னர் தெற்கு அரசியலில் அதிரடி மாற்றம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர், அவருடன் தீர்க்கமான பேச்சு நடத்த ஆளுங்கட்சியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.


கெரவலப்பிட்டி மின் நிலைய உற்பத்தி நடவடிக்கைகளை அமெரிக்காவுக்கு வழங்கிய ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார உட்பட்ட பிரமுகர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் நடத்தப்பட்ட பிரதமர் மஹிந்த 19

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி

A/L 2023
தொழினுட்பபிரிவு ஆரம்பம்
26.09.2021 ஞாயிறு காலை 09 மணி

புதிய கல்வியாண்டு 2023
விஷேட பிரிவு 2022
Day Class 2021
Paper Class 2021



அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்
நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், மாத்திரம் கொண்ட ஒரே ஒரு கல்வி நிறுவனம்
தொடர்புகளுக்கு : 077 017 5346

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தீட்டு, பேசினால் குற்றம் என்ற துடக்குகள் இப்போது அரசியலுக்கும் வந்து விட்டன போலும். இது சாதிப் பிரிவினை அல்ல. கட்சிப் பிரிவினை. கட்சி பேதம்.

தாங்கள்தான் தூய 24 கரட் தங்கம். மற்றவை எல்லாம் வெறும் பித்தளை, ஈய உலோகம் என்ற தடிப்பு – நினைப்பு – சில தரப்புகளுக்கு. அங்கு சாதித் திமிர் போன்று இங்கு கட்சித் திமிர்.

மலையக மக்களின் வாழ்வுரிமையை – சிவில் உரிமையை – பறிப்பதற்குத் துணை போன தங்களின் பழைய திருகுதாளங்களை மக்கள் மறந்து போனதால் தாங்கள்தான் ஒரிஜினல் சொக்கத் தங்கம், மற்றக் கட்சிகள் எல்லாம் பித்தளை, ஈயம் என்ற திமிர் பல சமயங்களில் தலைக்கேறி விடுவதுண்டு.

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளின் எம்.பிக்களை ஒரே குரலில் பேச வைப்பதற்கு சில ஆன்மீகத் தரப்புகளின் முன் முயற்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

அது ஆரம்பிக்கப்பட முன்னரே அதில் நாங்கள் பங்குபற்றவே மாட்டோம், ஐ.நாவில் காட்டிக் கொடுத்த கூட்டமைப்புடன் எங்களை ஏன் கூட்டிக் கொடுக்க முயற்சிக்கின்றீர்கள் என்று தனியார் தொலைக்காட்சி ஒன்றிடம் சீறியிருக்கின்றார் கட்சியில் குதிரை விடும் செயலாளர் என அறிய வருகின்றது.

நல்ல ஸ்டாண்ட்தான். ஆனால் எனக்கு ஒரு விடயம் விளங்கவில்லை.

கடந்த செவ்வாயன்று வல்வெட்டித் துறை நகர சபைத் தலைவர் தெரிவு நடந்தது. கூட்டமைப்பின் பெயரில் ரெலோ காய் நகர்த்தியது. கூட்டமைப்பிலிருந்து ஏற்கனவே வெளியேற்றப்பட்டு, அதனால் நீதிமன்றத்தில் வழக்கில் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும் தமது எதிர்ப்பாளரையே பின் கதவால் தலைவராக்க ரெலோ எத்தனித்தது. ரெலோவைப் பிளந்து, தனிக் கட்சி அமைத்த சிவாஜியும் இந்த சதிக் கூட்டில் இணைந்தார். மறுபுறம் சுயேச்சைக் குழு களத்தில்.

இரண்டுமே ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள், நாங்களோ ஆசார சீலர்கள், உங்களுடன் முட்டவும் மாட்டோம், முட்டுப்படவும் மாட்டோம் என்று இந்தத் தேர்தலில் 24 கரட் ஓரிஜினல் தங்கக் கட்சி தீர்மானித்திருந்ததாகத் தகவல் வெளியானது. அக்கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் தலைவர் தெரிவில் வாக்கெடுப்பில் பங்குபற்ற மாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது; கூறப்பட்டது.

ஆனால் முதல் நாள் இரவு எல்லாம் தலைகீழ். ரெலோவின் வேட்பாளரை சுமந்திரன் எதிர்க்கின்றாராம். ஆகவே ரெலோவின் வேட்பாளர்களை ஆதரியுங்கள் என்று 'கொள்கை மாறா' (?) குணக்குன்று – குமாரின் வாரிசு – தொலைபேசியில் கட்டளையிட்டதாம். பிறகென்ன, ரெலோவின் அராஜக வேட்பாளரின் வாக்கு எண்ணிக்கை இரண்டால் அதிகரித்தது. பாவம். அப்படியிருந்தும் ஒரு வாக்கால் தோல்விதான். 24 கரட் சேர்ந்து கொண்டதால்தான் அந்த அபசகுனம் என்றார் ஒரு வல்வெட்டித்துறை வாசி. நான் அப்படி நம்பவில்லை. ஆனால் எனக்கு ஒரு கேள்வியுண்டு.

தமிழ்த் தேசியம் பேசும் எம்.பிக்கள் ஒன்று பட்டுச் செயற்படுவதில் கூட்டமைப்பைப் பார்ப்பதே தீட்டு என்றால், வல்வெட்டித்துறையில் அணி சேர்ந்து வாக்களிக்கும் போது இந்தத் துடக்கு, மடி – ஆசாரம் எல்லாம் அப்போது எங்கே போயிற்று? பொன்னம்பலப் பெருமானே! நீதான் விளக்க வேண்டும்...!

★ ★ ★

'புலி வருது, புலி வருது' என்று எந்நேரமும் கூப்பாடு போட்டால், ஒரு நாளைக்கு உண்மையாகப் புலி வரும் போதும் கூப்பாடு போடுவதை யாரும் நம்ப மாட்டார்கள்.

வடக்கு மாகாண ஆளுநர் மாற்றம் என்ற செய்தியும் 'புலி வருகுது' தகவல் மாதிரித்தான் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றது. உண்மைப் புலி எப்போது வரும் என்பது தெரியவில்லை.

அரசுக்கு நெருக்கமான இணையத் தளம் ஒன்று முன்னாள் அரச அதிபரும், வெளிவிவகார ராஜாங்க அமைச்சின் செயலாளருமான சுந்தரம் அருமைநாயகம் விரைவில் வடக்கு ஆளுநராக நியமிக்கப்படுவார் என்றும், அதற்கு முன்னேற்பாடாக தற்போதைய ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் அடுத்த வாரம் பதவி விலகுவார் என்றும் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

எது, எப்படியோ நித்திய கண்டம், பூரண ஆயுசு என்ற மாதிரி சார்ள்ஸ் அம்மையார் தமது பதவியில் சந்தம் சந்தடி, ஆரவாரங்கள், எடுப்புக்கள், குழப்பங்கள் இல்லாமல் தானும் தன்பாடுமாகத் தொடர்கின்றார். நடப்பதைப் பார்த்திருப்போம்.

★ ★ ★

பதவி இழந்த மாகாண சபை உறுப்பினர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்திருப்பதாக கொழும்பு சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. அதன்படி முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இரண்டு கோடி ரூபா பெறுமதியான செயற்றிட்டங்களை அடையாளம் கண்டு, அவர்களின் முன்னுரிமை அடிப்படையில் செலவிடும் அதிகாரங்களைக் கொண்டிருப்பர் என்று கூறப்படுகின்றது. அந்தச் செய்தி உண்மையோ, பொய்யோ தெரியவில்லை விவரம் இதுதான்:–

கிராமிய பிரதேச அபிவிருத்திக்காக இம்முறை வரவு – செலவு திட்டத்தில் பிரதேச இணைப்புக்குழுவின் தலைவர்களுக்கும், இறுதி மாகாண சபைகளில் அங்கம் வகித்த உறுப்பினர்களுக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்குமாகத் தனித்தனியே அபிவிருத்திக்குரிய நிதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில் அபிவிருத்தி சபை தலைவர்களுக்கு 10 கோடி ரூபா நிதியும், இறுதியாக மாகாண சபைகளில் அங்கம் வகித்த உறுப்பினர்களுக்கு கட்சி பேதமில்லாமல் இரண்டு கோடி ரூபா நிதியும், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றோருக்கு நாற்பது லட்சம் ரூபா நிதியும் அபிவிருத்தி பணிகளுக்காக வழங்கப்படவுள்ளன .

மேலும் மாகாண சபைகளுக்குட்பட்ட ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் முப்பது லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் 12 லட்சம் ரூபா மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி தேவைகளுக்காகவும், 12 லட்சம் ரூபா பொது அபிவிருத்தித் தேவைகளுக்காகவும் மேலும் 6 லட்சம் ரூபா சுற்றாடல் மற்றும் சமூக நல அபிவிருத்திக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள மானியங்களை 'கம சமக பிலி சந்தரக்' எனும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அனைத்துவித பிரதேச அபிவிருத்திக்குரிய மானியங்கள் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்பாடு மக்கள் பிரதிநிதிகளுடையது என்றும் இந்த மானியங்கள் விரைவாக மக்களை சென்றடைவதே இம்முறை வரவு – செலவு திட்டத்தின் பிரதான நோக்கமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

– இதுதான் அந்தச் செய்தி. இனி என்ன, முன்னாா மாகாண சபை உறுப்பினர்கள் மவுசு பழையபடி பப்பாவில் ஏறிவிடும். ஆள்களை (அவர்களை) பிடிக்க முடியாது. அடுத்த தேர்தல் விதைப்புக்கு இப்பவே பசளை போடத் தொடங்கி விடுவார்கள். எல்லாம் பசிலின்ரை புண்ணியம்தான் பாருங்கோ....!

– மின்னல் –

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவால் ஆயுதமுனையில் அச்சுறுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நேற்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இராஜாங்க அமைச்சரால் துன்புறுத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைச் சந்தித்து பேசியிருக்கின்றோம். கடந்த 12 ஆம் திகதி மாலை 6.05 மணியளவில் சிறைச்சாலைக்குப் பொறுப்பாக உள்ள இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலைக்கு வந்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ள கைதிகளை தன் முன்பாக கொண்டு வந்து நிறுத்தி, அவர்களை மிரட்டி, அனைவரையும் முழங்காலில் நிற்க வைத்து, மிக மோசமாக நடந்துகொண்ட சம்பவம் பற்றியும் அதில் இருவரை மிகவும் கூடுதலாக பயமுத்தி தன் கைத்துப்பாக்கியை அவர்களின் தலையில் வைத்து சுடுவதற்கு ஆயத்தமான விடயங்கள் அனைத்தையும் நாங்கள் நேரடியாக கேட்டறிந்துள்ளோம்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அறிந்துள்ளோம். மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை மேற்கொண்டுள்ளது. தற்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நியமித்துள்ள விசாரணைக்குழுவும் விசாரணை செய்கின்றது. இதனைவிடவும் கூடுதலான விசாரணைகள் இடம் பெறும் என நாம் அறிகின்றோம். இந்த சம்பவங்கள் உண்மையாக இடம்பெற்ற நிகழ்வுகள். இதில் எவருக்கும் சந்தேகம் இருக்கவில்லை.

கடந்த நாடாளுமன்ற தினத்தில் இவ்விடயம் எழுப்பப்பட்டபோது இந்த விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரவை அமைச்சரான நீதி அமைச்சர் அலி சப்ரி இந்தச் சம்பவங்களுக்காக மன்னிப்பு கேட்டார். இரண்டு தடவைகள் திரும்ப திரும்ப மன்னிப்பு கேட்டார். கைதிகளிடமும் அவர்களின் உறவினர்களுக்கு இதன் காரணமாக ஏற்பட்ட மன உளைச்சலுக்காகவும் மன்னிப்பு கேட்டார். ஆகவே, நடக்காத விடயத்துக்கு அவர் மன்னிப்பு கேட்கவில்லை.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் இந்த சிறைச்சாலைகளில் இருந்து தமிழ் பிரதேச சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட வேண்டும். கொரோனா காலத்தில் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அவர்கள் மாற்றப்பட்டு இருந்தவர்கள். எனவே, யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்ற முடியாது என எவரும் சொல்ல முடியாது.

வவுனியாவில் உள்ளது விளக்கமறியல் சிறையே. அது சிறிய இடம். எனவே, முன்னர் நிர்வாகத்துக்கு தேவையானதாக யாழ்ப்பாணத்துக்கு மாற்றியிருந்தது போல இவர்களது பாதுகாப்பு கருத்தியும் விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெறவேண்டுமாக இருந்தால் அவர்கள் அவ்வாறான சூழலுக்குள் மாற்றப்பட வேண்டும்.

எனவேதான் அவர்கள் விசாரணைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியதாக இருக்கும். பயம் இல்லாமல் சாட்சியம் வழங்கக் கூடியதாக இருக்கும். வெளியில் இருக்கும் சாதாரண மக்களே சாட்சியம் வழங்க அச்சப்படும் சூழலில் சிறைச்சாலைக்குள் அடைக் கப்பட்டுள்ளவர்கள் அது குறித்து பயப்படுவது நியாயம் என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, அவர்கள் உடனடியாக இட மாற்றம் செய்யப்படவேண்டும் என அரசிடம் கோருகின்றோம் – என்றார்.

## ஒக்டோபர் முதலாம்...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி..)
வரை தாமதமாகலாம் என்றும் இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனிடையே ஒக்டோபர் முதலாம் திகதி நாட்டைத் திறக்க எதிர்பார்த்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவும், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்றுமுன்தினம் உயிரிழந்த 79 பேரில் 38 பெண்களும், 41 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 10 ஆண்கள், 12 பெண்கள் என 22 பேர் 30 –59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 57 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 31 ஆண்களும், 26 பெண்களும் அடங்குகின்றனர்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 12 ஆயிரத்து 518 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 997 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 53 ஆயிரத்து 689 ஆக உயர்வடைந்துள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 6 பேர் மரணமடைந்துள்ளனர்.


வவுனியா செட்டிகுளத்தில் ஆண் ஒருவரும் (வயது 80), கன்னாட்டி கணேசபுரத்தில் ஆண் ஒருவரும் (வயது 77), கந்தசாமி கோவில் வீதியில் பெண் ஒருவரும் (வயது 91), தேக்கவத்தை பகுதியில் பெண் ஒருவரும் (வயது 74), தோணிக்கல் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது 83), சிவபுரம் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது58) உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், மரணித்த 6 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

Personal
English Classes

K Ganesh (BA.Pera)
இந்த வகுப்புகளில் படிப்பவர், திரும்ப ஒரு ஆசிரியரை தேட தேவையில்லை.
Grammar,
Fluent Spoken
Grade 7 -
பட்டதாரிகள், including
English Medium ,
தொழில் புரிவோர்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A
பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

HIKVISION
MEGA STORE
No.1 WorldWide CCTV and Video surveillance
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொது பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை, சிறந்த முறையில் கண்காணிப்பினை உறுதி செய்வதற்கு குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தி தரப்படும்
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்
Main Show Room in Northern Province
+94772257126
hikvisionmegastore@gmail.com
NO:164, PALALI ROAD, THIRUNELVELY, JAFFNA. Tel :021 2227126
இல. 164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road, Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

## 50 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர்?

**பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவிப்பு**



எதிர்வரும் காலத்தில் 50 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொவிட் தடுப்பூசியின் மூன்றாம் டோஸான பூஸ்டர் தடுப்பூசியை செலுத்த வேண்டி ஏற்படும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உயிரணு உயிரியல் பிரிவு பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்தார்.

சினோபோர்ம் தடுப்பூசி செலுத்திக் கொண்ட இளம் வயதினருக்கு பூஸ்டர் தடுப்பூசி தேவைப்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் 50 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்த வேண்டியது இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

With Best Compliment From .....
THE SASIKA DRIVING SCHOOL TSL
சசிகா லேணர்ஸ்
“அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை”
Reg. No - DS882
THE SASIKA LEARNERS
முறைமையான சாரத்தியத்தை கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
CHOOSE RIGHT WAY
தலைமைக்காரியாலயம்
இல. 57 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
021 221 7578/ 7678
077 6140361, 077 722 6247
sasikadrivingschool@gmail.com
sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
உரிமையாளரின் தொடர்புக்கு - 0777 226 247 / 077 614 0361
யாழ் மத்தி (Twon) 021 222 8004 070 3015004
சாவகச்சேரி 021 227 0616 071 557 0616
மல்லாகம் 021 224 3393 070 301 3014
நெல்லியடி 021 226 0999 071 775 0999
சங்கானை 021 225 1664 070 301 3016
காரைநகர் 021 225 2454 070 510 2484
பண்டத்தரிப்பு 021 225 2333 071 255 4135
வேலணை 021 221 5472 070 301 3012

என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
தியாக தீபம் திலீபனின் 34 வது ஆண்டு நினைவு நாள் - 26.09.2021
இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, 5அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து தன் உயிரை ஈகம் செய்த மாவீரன் திலீபனுக்கு வீர வணக்கம், இதய பூர்வமான அஞ்சலி.

1. இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலையை நிரூபித்தல் (GENOCIDE)
2. இனப் படுகொலைக்காக இலங்கை அரசை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தல். (INTERNATIONAL CRIMINAL COURT - ICC)
3. இனப் படுகொலை மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்தல் (NON-RECURRENCE)
4. தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்களுக்காக ஈடு செய் நீதி (REMEDIAL JUSTICE) கிடைப்பதை உறுதி செய்தல்
5. ஈடு செய் நீதி கிடைப்பதன் மூலம் இலங்கையின் வடக்கு,கிழக்கு பிராந்தியத்தில் தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் பொதுசன வாக்கெடுப்பு (REFERENDUM) ஒன்றை நடாத்துதல்
மேற்படி ஐந்து அம்சங்களை நிறைவேற்றுமாறு குவாட்( QUARD) அமைப்பை (அமெரிக்கா,இந்தியா,ஜப்பான்,அவுஸ்திரேலியா உட்பட) கேட்டுக் கொள்கின்றோம்.
தமிழர்களின் தாகம் !
தமிழ் ஈழத் தாயகம் !!
- தமிழ்த் தேசியக் கட்சி
(TAMIL NATIONAL PARTY)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேவை: ஒரு திலீபன்!

**கனலும் துப்பாக்கிகள், முழங்கும் பீரங்கிகள், வெடிக்கும் 'மல்டி பரல்கள்' போன்றவை ஏற்படுத்த முடியாத பேரதிர்வை ஓர் அறப்போர் வீரன் ஏற்படுத்தினான்.**

**ஒரு மறப் போராளி, அறப் போராளியாகி ஈகத்தின் – தியாகத்தின் – உச்சத்தைத் தொட்ட வரலாற்றுப் பதிவின் நினைவு தினம் இன்று.**

**காந்தி தேசத்துக்கே காந்தியம் இதுதான் என்று அஹிம்சை போதித்த ஒரு சாதனை வீரனின் நினைவு தினம்.**

**அறவழியின் மாண்பைப் போதித்த காந்தியினால் கூட எட்ட முடியாத அஹிம்சைத் தத்துவத்தை வாழ்வில் நிரூபித்துக் காட்டிய உயரிய மறவன் தியாகி திலீபன். அவனின் 34ஆவது நிறைவு தினம் இன்று.**

**தன்னை வருத்தி, அதன் மூலம் எதிரிக்கு மன வலியை ஏற்படுத்தி, எதிரியை வசப்படுத்தி, நெறிப்படுத்தும் உயரிய மாண்பை உலகுக்கு உணர்த்தியவர் – எடுத்துரைத்தவர் – காந்தி மகான். அவரால் கூட தண்ணீரும் அருந்தாமல் உண்ணா நோன்பு இருக்க முடியவில்லை. அத்தோடு நீதி, நியாயம், தார்மீகம் முதலிய மாண்புகள் கொண்ட எதிரியுடன்தான் அந்த அஹிம்சை ஆயுதத்தை அவர் பரிசோதித்தார். அதனால் அந்த அஹிம்சைப் போராட்டத்தில் தம்மையோ, தமது அறவழிப் போராளிகளையோ அவர் காவு கொடுக்க வேண்டிநேரவேயில்லை. அஹிம்சைப் போராட்டத்தின் மாண்பும், சிறப்பும், உயர்வும் அவரது எதிரிகளுக்கு நன்கு புரிந்திருந்தன. அவர்கள் அஹிம்சைப் போரின் அறத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய மனிதப் மாண்பாளர்களாக இருந்தனர்.**

**ஆனால், அன்று நமது திலீபன் எதிர்கொண்ட எதிர்த்தரப்பு, காந்தியத் தத்துவத்தை வாயில் பேசிய நடிப்பு சுதேசிகள் மட்டுமே. அந்த அறநெறி ஆயுதத்தின் நேர்மையான வலிமை அவர்களின் மனிதத்துவமற்ற பண்பியல்புகளுக்கு முன்னால் உணரப்படவேயில்லை. அதனால் அன்று திலீபன் அணுஅணுவாகச் சாகடிக்க விடப்பட்டான். காந்தி தேசத்தின் முன்னால் காந்தியமே தோற்றுப்போனது. மனித மாண்பற்றவர்களின் மனக் கதவு மனிதத் தன்மையற்றது. காட்டுமிராண்டித் தனமானது. அஹிம்சையின் உயரிய அர்ப்பணிப்பை மன வலியுடன் உணரும் மாண்புடையது அல்ல அது. ஆறறிவு மனிதர்களுக்குள் உணர்வற்ற ஜடமாக இருந்த அந்த மனவுருவால் அஹிம்சாவிரதியின் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் புரிந்து கொள்ள முடியவில்லை.**

**தியாக தீபத்தின் முன்னால் தோற்றுத் தலை குனிந்து போன இந்திய அதிகார வர்க்கம் இன்னும் கூட – இன்றும் கூட – நிமிரவேயில்லை. அதுதான் உண்மை.**

**திலீபனின் ஈகப் போராட்டத்துக்கு – அஹிம்சை எழுச்சிக்கு – எதிராக இலங்கை அரசுத் தரப்பும், பொலிஸாரும், அவர்களின் வழி நடத்தலில் இயங்கும் நீதித்துறையும் செயற்படுகின்றமையும் கூட அஹிம்சை நெறியின் மகோன்னதத்தை – சிறப்பை – உயர்வை – ஆழத்தை – மாண்பை – புரியும் பக்குவமற்ற அடாவடித் தரப்புகளே அவை என்பதற்கான சான்றுகள்தாம்.**

**அன்று அந்த மறப்போராட்டத்துக்கு எழுச்சியும், புத்துணர்ச்சியும் ஊட்டி, அந்த நெறியை நியாயப்படுத்த ஓர் அறப்போராளி தேவைப்பட்டான். திலீபன் முகிழ்ந்தான். இனத்தின் குரலாய்க் கிளர்ந்தான். அவனின் ஈகத்தில் மறப்போராட்டம் உயிர்ப்புப் பெற்றது.**

**இன்று நம் முன் இருக்கும் ஒரே பாதை அறப்போட்டம் தான். ஆனால் அதற்குத் தேவையான ஈகம், தியாகம், தன்னை உருக்கும் பக்குவம், விட்டுக்கொடாக் கொள்கை, இலக்கிலும் இலட்சியத்திலும் பற்றுறுதி, இனப்பற்று இவை எவையும் நம் மத்தியில் – நம் தலைவர்கள் மத்தியில் – இப்போது இல்லை.**

**ஈழத் தமிழரின் அபிலாஷைகள் தொடர்பான அறப் போராட்டத்தைக் கொதி நிலையில் வைத்து, அதன் இலக்குகளை எட்டுவதற்கும், எங்களை உசுப்பேத்தி வழி நடத்தவும், எங்கள் மத்தியில் பல திலீபன்கள் உருவாக வேண்டும். இன்று நமது தேவை அதுதான். அது விடயத்தில் நம் தலைவர்கள் வெறும் கையால் முழம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதுதான் நம் துரதிர்ஷ்டம்.**

## வியாழேந்திரனை நேரடி விவாதத்துக்கு அழைக்கின்றார் கல்முனை விகாராதிபதி



-கேதீஸ்-

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அரசியல் நடப்புகள் தொடர்பாக நேரடி விவாதத்துக்கு வர வேண்டும் என்று கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி ரன்முத்துக்கல சங்கரட்ண தேரர் பகிரங்க சவால் விடுத்துள்ளார். இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை காலை விகாரையில் ரன்முத்துக்கல சங்கரட்ண தேரரை சந்தித்து அவர்களுடைய தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு கோரினர்.

இதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு ரன்முத்துக்கல சங்கரட்ண தேரர் தெரிவித்தவை வருமாறு -

அமைச்சர் வியாழேந்திரன் தேர்தலுக்கு கடந்த அம்பாறை மாவட்டத்துக்குப் பல முறை வந்து மக்களை நேசிக்கும் ஒருவராக மேடைகளில் முழங்கினார். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாகப் பல கருத்துக்களை முன்வைத்தார். உறுதி மொழிகளை வழங்கினார். வென்ற தன் பின்னர் அம்பாறை மாவட்ட பக்கமே வரவில்லை. தற்போது இராஜாங்க அமைச்சராகவும் உள்ளார். இங்கு எந்த சேவையும் செய்யவில்லை. இவர் மட்டக்களப்புக்கு மட்டுமா அமைச்சர்?

நான் வியாழேந்திரனை பகிரங்க விவாதத்துக்கு அழைக்கின்றேன். அவர், தான் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான அமைச்சர் என்றுதான் நினைத்து கொண்டு இருக்கின்றார். அதனால்தான் தேர்தலுக்கு பின் அம்பாறை மாவட்டத்துக்கு வராமல் உள்ளார். இது தொடர்பாக அவர் என்னுடன் விவாதிக்கலாம்.

ஆசிரியர், அதிபர் சேவையில் கடந்த 24 வருடங்களாக நிலவி வருகின்ற சம்பள முரண்பாட்டை நீக்க அரசாங்கம் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதை வலியுறுத்தி முன்னெடுக்கப்படுகின்ற தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகின்றேன். அதே போல, பாடசாலைகள் மாணவர்களின் நலன் கருதி விரைவாக மீள ஆரம்பிக்கப்பட வேண்டும். - என்றார்.

## ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டு 77 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது!

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 77 ஆயிரத்து 877 ஆக அதிகரித்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் நேற்று (சனிக்கிழமை) காலை 6 மணி வரையான காலப்பகுதியில் மேலும் 334 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த காலகட்டத்தில் 25 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேல் மாகாணத்துக்குள் நுழைய முற்பட்ட 1,309 பேரும் 912 வாகனங்களும் மாகாணத்தை விட்டு வெளியேற முயன்ற 1,258 பேரும் 837 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

அவர்களுள் முறையான அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருக்காத 329 பேரும் 176 வாகனங்களும் திருப்பி அனுப்பப்பட்டன எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## கைக்குண்டு தயாரிக்க உதவிய குற்றச்சாட்டு; நாரஹேன்பிட்டவில் 22 வயது இளைஞன் கைது!

நாரஹேன்பிட்ட வைத்தியசாலையின் கழிவறையில் இருந்து கைக்குண்டு கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் குறித்த விசாரணையில் மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் வசிக்கும் 22 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட முக்கிய சந்தேக நபருக்கு வெடிகுண்டு தயாரிக்க மேற்படி நபர் உதவினார் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரைத் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாரஹேன்பிட்டி வைத்தியசாலையில் இருந்து அண்மையில் கைக்குண்டு ஒன்று மீடகப்பட்டமை தொடர்பாக, திருகோணமலை - உப்புவெளி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒக். 15 வரை மாகாணத் தடை?

*தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி தளர்த்தப்பட்டாலும், மாகாணங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்தை ஒக்டோபர் 15 ஆம் திகதியளவிலேயே ஆரம்பிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என அறிய முடிந்தது.*

*அத்துடன், பொது நிகழ்வுகளை நடத்துதல் உட்பட இதர விடயங்கள் தொடர்பிலும் எதிர்வரும் 15ஆம் திகதியளவிலேயே தீர்மானம் எட்டப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.*

*நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் முதலாம் திகதி கட்டுப்பாடுகள் சகிதம் தளர்த்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.*

*அதன்பின்னர் நாடு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் பல தரப்புகளுடனும் சுகாதார அமைச்சு ஆலோசனைகளைப் பெற்று வருகின்றது எனவும் தெரியவருகின்றது.*

## திடீரென பற்றி எரிந்த ஓட்டோ; ஒருவர் சாவு



ஓட்டோ ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை திடீரென தீப்பற்றி எரிந்ததில் அதில் இருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மஹவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்லேவ, கொன்வெள பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொன்வெள பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மஹவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 87

ந.வித்தியாதரன்


எழுத்தாளர் தமிழ்வாணனுடன் எஸ்.டி.எஸ்.ஐயா

பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சமயத்தில் எனக்கு நானே சில விதிமுறைகளை வகுத்துக் கொண்டேன். அவை, சிவநாயகம் ஐயா என்ற ஜாம்பவானில் நிழலில் கற்றுக் கொண்ட பத்திரிகா தர்மம் என்ற அடிப்படை கோட்பாட்டிலிருந்து எழுந்த விதிமுறைகள்தாம். அதில் ஒன்று -

"எனக்குக் கீழ் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றும் ஒவ்வொருவரும் வரைகின்ற செய்திகளுக்கும் விடயங்களுக்கும் தார்மீக ரீதியில் நானே பொறுப்பு, ஆகவே எந்தச் சந்தர்ப்பத்திலும் செய்திக்கான பொறுப்புக்காக எனக்கு கீழ் பணியாற்றும் எவரையும் எனது பத்திரிகை நிர்வாகத்திடமோ அல்லது வெளியில் அரசு, நீதி - நிர்வாகம், சட்டத்துறை, இயக்கங்கள் என்று எந்தத் தரப்பினரிடமும் காட்டிக் கொடுக்கவே கூடாது" - என்பதாகும்.

ஒரு பத்திரிகை ஆசிரியரை பொறுத்தவரை ஒரு பிரதேசத்தில் அவரின் கண்கள், காதுகள் எல்லாம் அந்தப் பிரதேசத்துக்கான அவரின் செய்தியாளர்தான். அந்தச் செய்தியாளர் மூலம்தான் அந்தப் பிரதேசத்தை ஆசிரியர் பார்க்கின்றார், அங்கிருக்கும் குரல்களைக் கேட்கின்றார், அந்தப் பிராந்தியத்தைத் தரிசிக்கின்றார், விடயங்களைக் கிரகித்து அறிகின்றார். பிரதேச செய்தியாளரை விட்டுக் கொடுப்பது என்பது பத்திரிகை ஆசிரியர் தன்னை - தனது கண்களையும் காதுகளையும் - விட்டுக் கொடுப்பதற்கு சமனானதாகும்.

இது விடயத்தில் ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஐயா எப்படி செயற்பட்டார் என்பதற்கு நீண்ட காலம் திருகோணமலை பிரதேச செய்தியாளர் ஆக பல சாதனைகளைப் படைத்த சின்னையா குருநாதனின் இந்தப் பதிவு நல்ல எடுத்துக்காட்டு. உதயன், சஞ்சீவி பத்திரிகையின் ஆரம்ப கர்த்தாக்களில் குருநாதரும் ஒருவர். மிக நெருக்கடியான காலகட்டத்தில் உதயன் ஆசிரிய பீடத்தில் பொறுப்போடு செயற்பட்டு காத்திரமாக பங்களித்தவர். சஞ்சீவி ஆசிரியராகப் பணியாற்றி அதன் தரத்தை மேம்படுத்தியவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அருவி கொட்டுவது போல அருமையான மொழி நடையில் செய்திகளை எழுதித் தள்ளுவார்.

ஒருவகையில் திருகோணமலையில் எங்கள் அயலவர் குருநாதன். சிறுவயதிலிருந்தே என்னை சீராட்டி, பாராட்டி பேணிய மூத்த வழிகாட்டி என்று சொல்லக் கூடியவர். அவரது பார்வை ஊடாக சிவநாயகம் ஐயாவை தரிசிப்போம் வாருங்கள்:-

பத்திரிகை உலகில் பிரவேசித்த போது அமரர் சிவநாயகம் ஐயாவின் அருகில் வருடக் கணக்கில் உட்கார்ந்து பணிபுரியும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்கவில்லை. எனினும், பத்திரிகைத் தொழிலில் முப்பத்தாறு வருடங்களை நிறைவு செய்த பின்னர்தான் - 1995 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் - அந்த அரிய வாய்ப்புக் கிடைத்தது. அதுவும் சுமார் நூறு தினங்கள் வரை நீடித்தது. இருந்தும் ஒரு திருப்தி.

பிரதேசச் செயலாளராகப் பத்திரிகை உலகில் பிரவேசித்தவனைத் தரமான பத்திரிகையாளனாக அடையாளங்கண்டு தன்னுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கு இணைத்துக் கொண்டாரே! அந்த விசாலமான உள்ளம் கொண்டவராக அவர் விளங்கியமையால் தான் அவர் இன்று ஈழத்தின் பத்திரிகைக் கலாமேதை, ஜாம்பவான், மகோபாத்தியாயர் என்று நிரந்தரப் புகழுக்கு உரியவராகியுள்ளார்.

அமரர் சிவநாயகம் தனது பத்திரிகையுலக வாழ்வின் நிறைவில் சூடாமணி என்ற வாரத் தமிழ்ப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தார். அதனை ஆரம்பித்த போதுதான் அப்பத்திரிகையின் ஒரு கட்டுரையாசிரியராக என்னையும் சேர்த்துக் கொண்டார். திறமையுள்ளவர் நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் அவரை இனங்கண்டு, அவருக்குரிய இடத்தைக் கொடுப்பதில் அமரர் சிவநாயகம் ஒரு வழிகாட்டியாக விளங்கினார்.

1959 இல் வீரகேசரியில் பிரதேச செய்தியாளனாகச் சேர்ந்த போது, சிவநாயகம் சுதந்திரனில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். 1961 இல் அன்னார் வீரகேசரியில் இணையாசிரியராகப் பணியாற்றினார். அவரைப் பத்திரிகை ஆசிரியராக நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு அப்போதுதான் கிடைத்தது.

1966 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வீரகேசரி செய்தியாளன் என்ற வகையில் நெருக்கடி ஒன்று ஏற்பட்டது. உண்மைகள் செய்தியாக பத்திரிகையில் பிரசுரமாகும் போது, அதனால் பாதிக்கப்பட்டவர்களின் ஆத்திரத்துக்கு முதலில் இலக்காவது செய்தியாளன்தான். அச்செய்தி உண்மையானதாக இருப்பினும் அதனால், பாதிக்கப்பட்டவர் ஊரில் பெரும் புள்ளியாக இருந்துவிட்டால் போதும், செய்தி சரியா, பிழையா என்பதை விசாரிக்காமல் செய்தியாளனை பத்திரிகை நிர்வாகம் பழி(லி) வாங்கிவிடுகிறது. இந்த நிலை ஏற்பட்டபோது, அமரர் சிவநாயகம் தினபதி - சிந்தாமணி பத்திரிகைகளை ஆரம்பிப்பது தொடர்பான கருமங்களில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவருக்குத் தெரிவித்தேன். "வீரகேசரியை விட்டுவிடுங்கள். எங்களுடன் சேருங்கள்" என்றார் அமரர் சிவநாயகம் ஐயா.

பிரபலங்களின் தலையீடுகளுக்குப் பணிந்து, உண்மைச் செய்திகளைத் துணிந்து வெளிப்படுத்தும் பத்திரிகையாளர்களைப் பழிவாங்குவதில் ஈடுபடும் பத்திரிகை நிர்வாகத்துக்கு அமரர் சிவநாயகம் என்றுமே துணை போனதில்லை. உண்மையைத் துணிந்து அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக அமரர் சிவநாயகம் ஐயா விளங்கினார்.

அமரர் சிவநாயகம் ஐயா, ஒரு பல்துறை விற்பன்னர். மரபுக் கவிஞர். சிறந்த உரையாடலாளர்.

எந்த விடயம் குறித்தும் பிந்திய தகவல்களுடன் உரையாடுவார். வேகமாக வாசிப்பார். வேகமாகப் பேசுவார். ஆற்றொழுக்காக, தங்குதடையின்றிப்


அமரர் சி.குருநாதன்

பேசும் திறமை அவருக்கு இருந்தது. தமிழில் புதிய சொற்களை அறிமுகப்படுத்தி வந்தார். எழுத்து நடை வாசகர்களைக் கவர்ந்தது. சின்னச் சின்ன வசனங்களில் ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிவித்து வந்தவர். இலங்கையில் பயணக் கட்டுரைகளை எழுதுவதில்



அவருக்கு நிகர் அவரேதான். அவரை விஞ்சுவதற்கு இன்னும் ஒருவர் உருவாகவில்லை என்று தான் கூறவேண்டும்.

பத்திரிகை உலகில் சிவநாயகம் ஒரு பல்கலைக் கழகம் போன்று விளங்கினார். ஆனால், பல்கலைக் கழகம் சென்றுதான் பட்டதாரியாக வேண்டும் என்ற நியதியில்லை. வீட்டிலிருந்து தபால் மூலம் பாடங்களைப் பெற்று பட்டதாரியானவர்களும் உண்டு. சிவநாயகம் ஐயாவின் படைப்புக்களை பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் மூலம் படித்து, பத்திரிகையாளர்களாகத் தங்களை உருவாக்கிக் கொண்டவர்களும் இந்த நாட்டில் உள்ளார்கள். அருகில் இருந்து உருவானவர்களிலும் பார்க்க 'ஏகலைவன்கள்' ஆக நாட்டின் மூலை முடுக்குகளில் சிவநாயகம் ஐயாவின் படைப்புகளை வாசித்து, அவரின் வசன நடையில் மனதைப் பறிகொடுத்து, எழுத்தாளர்களாக, பத்திரிகையாளர்களாகத் தங்களை வளர்த்துக் கொண்டார்களே, அவர்கள்தான் சிவநாயகம் ஐயாவின் பத்திரிகைப் பணிக்குப் பெருமை சேர்ப்பவர்கள்.

சிவநாயகம் பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்களிடம் ஒன்றை முக்கியமாக வலியுறுத்தி வந்தார். அது நம்பகத்தன்மை. பத்திரிகையாளனின் வெற்றி, தோல்வி அந்த நம்பகத்தன்மையில்தான் தங்கியுள்ளது. நம்பகத்தன்மையற்ற பத்திரிகையாளன் பத்திரிகை உலகில் ஒரு ஜடமாகத்தான் கணிக்கப்படுவான். பத்திரிகையாளனை உயிர் வாழ வைப்பது, பத்திரிகைத் தொழிலால் அவனுக்குக் கிடைக்கும் வருமானம் மட்டுமல்ல, வருமானம் அவனின் 'நடமாடும் உயிரைத்தான்' வாழவைக்கின்றது. நம்பகத்தன்மைதான் அப்பத்திரிகையாளரை பத்திரிகை உலகில் உயிர் வாழ வைக்கின்றது என்பதில் அமரர் சிவநாயகம் உறுதியாக இருந்தார்.

சுதந்திரன் தொடக்கம் சூடாமணி வரை ஈழத் தமிழ்ப் பத்திரிகைத்துறையின் வளர்ச்சிக்கு அமரர் சிவநாயகம் ஆற்றிய பணிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும். அவை நூல் வடிவம் பெறவேண்டும்.

தமிழ் இதழியல் துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு அமரர் சிவநாயகத்தின் பத்திரிகை உலக வரலாறு ஒரு மைல் கல்லாக அமையும். தமிழ் இதழியல் துறையில் ஈடுபடவிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு சிவநாயகம் ஐயாவின் பங்களிப்பு உந்து சக்தியாக, வழிகாட்டியாக அமையும்.

- என்று தெரிவித்துள்ளார் குருநாதன்.

(வளரும்......)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 142

**377.இவை இனப் படுகொலைக்குத் துணை போயினவா?**

இந்த செயல்பாடுகளும், கொக்கரிப்புகளும், பெரும்பான்மை சமூகத்தாலும் அதிகாரங்களை தனவசப்படுத்தியிருந்த அரசுகளாலும் வேறு மாதிரிப் பார்க்கப்பட்டன. இவையெல்லாவற்றுக்கும் மூலகாரணமாக இருப்போரை நசுக்கி விடவேண்டும் என்ற வெறியைத்தான் அப்போக்குக் கிளறியது. இந்த நடப்புக்கள் தூண்டுகோலாகி, சிங்கள சமூகம் தமிழ் மக்களை நடத்துவதற்கு எதிர்மறைகளில் எப்படியான தீர்மானங்களை முன் னெக்கின்றது என்ற நோக்கங்களையும் தெளிவுபடுத்தியது.

கல்லெறிக்கு எதிரெறியான மனப் பாங்குதான். ஏன் கல்லை எறிகிறான் என்பதை ஆராயவோ, விளங்கிக் கொள்ள, விருப்பமில்லாத மனநிலை. மொங்கினால் சரிவரும் என்பதற்கான உசுப்பல்கள் வளர்ந்து அங்கு வந்து நின்றன.

இதில் தமிழ் அரசியலின் திறந்த தன்மையற்ற - நேரத்திற்கேற்ற - போக்குகளையும் விளங்கி கொள்ள வேண்டும்.

1977 இல் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராகி பல ஆண்டுகளின் பின் லண்டனுக்கு பயணமொன்றை மேற்கொண்டிருந்தபோது தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் (TRRO) சார்பில் அந்த சமயம் நானும் லண்டனில் பலரைச் சந்தித்து இயங்கி கொண்டிருந்தேன். 1977இன் கலவரங்களுக்குப் பிறகு தமிழருக்கான குழு (Standing Committee For Tamils - SCOT) என்ற அமைப்பு அங்கு இயங்கிய பல அமைப்புக்களை இணைத்துச் செயல்பட்டது. அதுவே, நான் செயற்பட்ட தளமாகவும் இருந்தது. பலரும் அமிர்தலிங்கமும் அவர்களது மேடையினூடாக கட்சி கருத்து வேறுபாடுகளின்றி தமிழ் மக்களைச் சந்திப்பார் என எதிர்பார்த்தனர். லண்டனிலோ தமிழரசு கட்சிக்கு ஒரு கிளை, காங்கிரஸுக்கு ஒன்று, கூட்டணிக்கு இன்னுமொன்று எனக் கட்சி வாரியாகவும் சமூக ரீதியாகவும் கிட்டத்தட்ட 17,18 அமைப்புகள் இருந்தன. இவற்றில் சில அமிர்தலிங்கத்துக்கு ஆதரவானவை. மற்றவர்கள் இடதுசாரிப் போக்குகளால் அமிர்தலிங்கத்தை மிதவாதியாகவே பார்த்தனர்.

SCOT Standing Committee of Tamil Speaking People

தமிழினத்தின் நன்மைக்கும் விடுதலைக்கும் இவர்கள் எல்லோரையும் ஒரு பொதுத் தளத்தில், அரசியல் நோக்கோடு இணைத்துச் செயல்படுத்த அமிர்தலிங்கம் விரும்பினார். 1977இன் கலவரத்தின் பின் தாங்களாவே ஒன்று கூடி செயல்பட்டு கொண்டிருக்கும் தமிழருக்கான குழுவை அந்தப் பொறுப்போடு விடலாம். இன்னொன்று தேவையில்லை என அபிப்பிராயம் தெரிவித்தேன். இருந்தும் அவருக்கு இசைவாக இருந்த அமைப்புகளோடு தமிழர் ஒருங்கிணைப்பு குழு (Tamil Co-ordinating Committee) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் அங்குரார்ப்பணக் கூட்டம் வைகுந்தவாசனின் இல்லத்தில் நடந்தது. அழைப்பில் பங்குபற்றியிருந்தேன். அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன் பங்கு பற்றி அதில் ஒரு பதவியை எடுத்தார் என்று நினைவு. வைகுந்தவாசன் அமைப்பின் தலைவரானார். அவர் இடதுசாரி சிந்தனைகளில் இருந்ததால் மற்றைய இடதுசாரி அமைப்புகளை அவர் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டாத்துடன் இணைத்துப் பயணிக்க வாய்ப்புகள் இருக்கும் என அமிர்தலிங்கம் எண்ணினார். ஆனால் சில காலங்களிலே வைகுந்தவாசன் தமிழீழத்தை அமைப்பதை அமிர்தலிங்கம் தன்னுடைய பொறுப்பிலே விட்டிருந்தார், அதற்கான செயற்பாடுகளை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு எடுக்கும் என்ற போக்கில் இயங்கியமையால் பல அமைப்புகள் விலகின; பின்வாங்கின. விடுதலைப் புலிகள் தாம் என்ன ஆதரவு தரலாம் என உட்புகுந்தனர். படிப்படியாக விடுதலை புலிகளின் கைகள் ஓங்கி அந்த அமைப்பு அவர்களுடையதாக மாறி சர்வதேசங்களிலும் விடுதலைப் புலிகளின் ஓர் உத்தியோகபூர்வ அமைப்பாக செயல்பட்டது. தமிழர் விடுதலை கூட்டணியுடன் - முக்கியமாக அமிர்தலிங்கத்துடன் - நல்ல உறவுகள் பிரபாகரனால் பேணபட்டமையால் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவில் ஏற்பட்ட மாற்றங்களும் வளர்ச்சியும் பெரிய அங்கலாய்ப்புகளைக் கொடுக்கவில்லை.

வைகுந்தவாசன் தனது செயற்பாடுகளை தனது மனத்திலேயே வைத்துக்கொண்டு, தாங்கள் தமிழீழம் நோக்கிப் பயணிக்க வேண்டிய பாதைக்கு அமிர்தலிங்கம் தரப்பு ஆர்வம் காட்டவில்லை என விமர்சனங்கள் வைத்துக் கொண்டு நகர, அவரது நெருக்கமும் விடுதலைப் புலிகளோடு கூடியது.




வைகுந்தவாசன்

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
பிரித்தானியா
TAMILS COORDINATING COMMITTEE (UK)

**378.தமிழீழம் நிறுவுவது தொடர்பில் வைகுந்தவாசன் நடவடிக்கைகள் எடுத்தாரா?**

அது வெகுவிரைவில் நடக்கும் என அமைப்புகளிடையே செய்திகள் கசிய விட்டார். ஆனால் அது எப்படி என்பது பற்றி அவரது ஐ.நா. பேச்சு போல் விவரங்கள் வெளியிடப்படவில்லை.



அமிர்தலிங்கம்

பின் 1982 ஆண்டு தைப்பொங்கல் தினத்தில் தமிழீழம் மலரும் என வெளிப்படையாக அமைப்புகளிடையே செய்திகள் சொன்னார். இப்படியான செய்திகள் வளர்ந்து கொண்டிருந்த நிலையில் 1981இல் லண்டன் சென்ற அமிர்தலிங்கம் வைகுந்தவாசனுடன் ஒரு முக்கிய சந்திப்பை வைத்தார். அதில் எப்படி, எந்த நேரத்தில் தமிழ் ஈழம் அமைவது என்பது கூட்டணியால் தீர்மானிக்க பட வேண்டும், அதனை வைகுந்தவாசன் நியமிக்க முடியாது, அப்படி தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் இல்லாமல் அவற்றை அவர் செய்வதானால் கூட்டணி அவருடன் தொடர்ந்து பயணிப்பது முடியாது எனவும, அப்படியான முனைப்புகளைக் கைவிடுமாறும் அவருக்குச் சொல்லப்பட்டது.

வைகுந்தவாசனோ புலம்பெயரின் சில அழுத்தங்களால் தமிழ் மக்களுக்காக அதை அமைக்க வேண்டிய காலமும் தேவையும் வந்து விட்டது, கூட்டணியின் இயலாத் தன்மையும் அவர்களது நாடாளுமன்ற அரசியலும் அவர்களைக் கட்டிப் போடுகின்றன என்று விவாதித்தார்.

எது சரி, பிழையோ முடிவில் வைகுந்தவாசன் அதனைச் செய்வதற்கு, தனதோ, கூட்டணியினதோ ஆதரவு கிடைக்காது என அமிர்தலிங்கம் கண்டிப்புடன் அறிவுறுத்தினார். விடுதலைப் புலிகளும் தாங்கள்தான் தமிழீழப் பிரகடனம் செய்வதோ அமைப்பதோ எனக் கருத்தாக்கம் கொண்டிருந்தால் வைகுந்தவாசனைப் பெருமளவு ஓரம் கட்டினர்.

(வளரும்)

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir



**We welcome students' ariticels in word for publication**

-Editor-

kalaikkathiredu@gmail.com

## President committed to building a secure future for all

In his first address at UN General Assembly says Govt.'s intention is to make SL prosperous to all, regardless of ethnicity, religion or gender Says ready to engage with all domestic stakeholders and obtain support of international partners, but insists lasting results can only be achieved through home-grown institutions Stresses greater accountability, restorative justice, and meaningful reconciliation through domestic institutions is essential to achieving lasting peace

Calls for development financing and debt relief through international mechanisms to support developing nations emerge from COVID devastation Welcomes support of the international community in the task of reviving Lankan economy and national development program

This assurance, as well as steps being followed amidst the pandemic and efforts to rebuild the economy, were shared during President's first ever address at the 76th UN General Assembly in New York. "We are ready to engage with all domestic stakeholders, and to obtain the support of our international partners and the United Nations, in this process. However, history has shown that lasting results can only be achieved through home-grown institutions reflecting the aspirations of the people," the President said.

He said that fostering greater accountability, restorative justice, and meaningful reconciliation through domestic institutions was essential to achieving lasting peace. "So too is ensuring more equitable participation in the fruits of economic development."

The COVID-19 pandemic has had a devastating impact on humanity. I sympathise deeply with all who have lost their loved ones during the pandemic. I thank frontline healthcare and essential workers around the world for their dedication and commend the World Health Organization for its crisis response. I also greatly appreciate the rapid advances made by the scientific and medical communities in devising vaccines and treatment protocols to combat the virus.

Although still a developing nation, Sri Lanka has been very successful in its vaccination program. The rapid progress of vaccinations was enabled by coordinated efforts between healthcare workers, Armed Forces and Police personnel, Government servants, and elected officials. In collaboration with the WHO, Sri Lanka is establishing a Regional Knowledge Hub to facilitate exchange of lessons learnt from COVID-19 and support countries to recover better.

As emphasised in the recent report by the Intergovernmental Panel on Climate Change, the unprecedented effect of human activity on the health of the planet is deeply worrying. Addressing the grave threats posed by climate change and the loss of biodiversity requires decisive and urgent multilateral action. As a climate-vulnerable country, Sri Lanka is deeply aware of the dangers of climate change.

It is in these contexts that Sri Lanka is a Commonwealth Blue Charter Champion and leads the Action Group on Mangrove Restoration.



## Ready to engage with Tamil diaspora - President

ஆழி சூழ்ந்த இவ்வுலகிலே உள்ள யாவும் ஒரு நாள் அழிந்து போகும். ஆனால், அழிந்து போகக் கூடாது என்ற ஒரு விடயம் என்றால் அது கலைதான். ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு ஊருக்கும், ஒவ்வொரு நாட்டுக்கும், ஒவ்வொரு பாரம்பரியத்திற்கும் என பல கலைகள் இவ்வுலகில் காணப்படுகின்றன. அந்தவகையில் இலங்கையை வடிவமைக்கின்ற பாரம்பரிய கலைகள் இன்றுவரை காணப்படுகின்றன. பல அழிந்து விட்டாலும் முக்கியமான ஐந்து கலைகள் இன்றும் நம் இலங்கைக்கு அடையாளமாக உள்ளன.

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட கலைதான் பிரளு எனும் இந்த ரேந்தை பின்னுதல் கலையாகும். இவற்றில் சில முறைகள் இன்றும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆடை வடிவமைப்பு, திரைச்சீலைகள், மேசை விரிப்புகள், மெத்தை விரிப்புகள் போன்றவற்றுக்கு உபயோகிக்கப்பட்டு வருகின்றன. முதலில் ஒரு வரைபட தாளில் தெளிவற்ற உருவமோ அல்லது வடிவமோ வரையப்படும். பின்பு தலையணை வடிவ மூட்டை ஒன்றின் மேல் இத்தாள் வைக்கப்பட்டு பிரத்தியேகமான ஊசிகள் மூலம் இணைக்கப்படும். இதன் பின்னர் நெசவாளர் தனது கைகளைக் கொண்டு நூலை பிரளுவின் ஊடாக வரைபடத்தில் உள்ள வடிவத்திற்கு ஏற்ப முடிச்சுட்டு வடிவமைப்பர். பிரளு (மரத்தினாலான நூல் வட்டு) மூலம் அந்த நூலுக்கு உயிர் கொடுப்பார் நெசவாளர்.

இதேபோன்று முகமூடி கைத்தொழிலும் மிக பிரசித்தி பெற்ற ஒரு கலையாகும். 1800களில் இலங்கை



நாட்டுப்புறவியலால் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் சடங்கு சம்பிரதாயங்கள், நாடகங்கள் மற்றும் பரிகாரங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கையால் செய்யப்படும் இந்த முகமூடிகள் காட்டு அரளி மரத்தின் பாரம் குறைந்த பலகைகளில் நாட்டுப்புற நாடகங்களில் தோன்றும் கதாபாத்திரங்கள் செதுக்கப்பட்டு அனுபவம் வாய்ந்த நடிகர்களாலும் நாடகக் கலைஞர்களாலும் அழகிய உணர்ச்சிபூர்வமான நாடகங்கள் நிகழ்த்தப்படும்.

கதாபாத்திரங்களை மிகத் துல்லியமாகவும் வண்ணமயமாகக் காட்டக்கூடிய பேய் ஆட்டம் எனும் முகமூடி அணிந்து நடனம் உள ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கும் என்ற ஐதீகம் இன்றும் காணப்படுகின்றது.

இந்திய கேரள மாநிலத்தில் முகமூடி தயாரிப்பு நுட்பங்களை இலங்கையின் முகமூடி தயாரிப்பு நுட்பங்களையும் இணைத்து பலவிதமான முகமூடிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கலையை இன்று நாம் அம்பலாங்கொடை, வத்துகெதர, பென்தர மற்றும் மேல்மாகாண கடலோர இடங்களில் காணக்கூடும். இக்கலையின் இதயமாக அம்பலாங்கொடை திகழ்கின்றது.

மேலும் இலங்கைக்கே உரித்தான லாக்ஷா கலையும் மிக உன்னதமான ஒரு கலையாகும். அரக்கைப் பயன்படுத்தி பலகைகளில் நுண்ணிய பாரம்பரிய வழிபாடுகளைக் கொண்டு வடிவமைக்கப்படுவது தான் லாக்ஷா கலையாகும். பல வேலைகளுக்கு மத்தியில் வீட்டுக்குச் சென்றால் ஒரு நிம்மதி கிடைக்கின்றது என்றால் அவ்வீடு பார்ப்பதற்கு அழகிய ஒழுங்கமைப்பில் வர்ணமயமாகவும் உன்னதமான சூழல் ஆகவும் காணப்படுகின்றது என அர்த்தம்.

அந்தவகையில் பல்வேறு வகையான வீட்டு அலங்கார உபகரணங்கள் மூலம் உருவாக்கப்படுகின்றன. இவற்றைத் தயாரிக்க வண்டுகளால் சேதப்படுத்தப்பட்ட மரங்களை அறுவடை செய்து அதன் மரப்பட்டையில் இருந்து நீரில் கரையாத பற்றாற்றல் மிக்க மரப்பிசின் எடுக்கப்படுகின்றது. அவ்வாறு எடுக்கப்பட்ட மரப்பிசின் வடிகட்டப்பட்டு தேவையான வண்ணங்களில் நிறம் ஊட்டப்பட்டு காய விடப்படுகின்றது. காய்ந்த பின்னர் கைகளினால் அல்லது பலகையில் சுற்றிவிட்டு அந்த சுழற்சியின் மூலம் நிறமூட்டப்படும்.

இம்முறைகள் அரக்கு கரையும் தன்மையைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. அப்போதுதான் பளபளக்கும் ஒரு நிறைவு வரும். நகத்தால் செய்யும் வேலைப்பாடுகள் சூடாக்கப்பட்ட அரக்கின் மீது வரையப்பட்டு எண்ணைச் சாயம் பூசப்படும். இக்கலை பிரசித்தி பெற்ற இடங்கள் பல்லே ஹபுவிட, மாத்தளை ஆகும்.

இலங்கையின் பண்டைய நுண்ணிய வேலைப்பாடுகளில் ஒன்றுதான் களிமண்ணில் உபகரணங்கள் தயாரித்தல் முறையாகும். சமையல் உபகரணங்



கள், களிமண் உருவச் சிலைகள், பூச்சாடிகள், சட்டிகள் மற்றும் பரிசுப் பொருள்கள் என்பன இம்முறை மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நீர், தூர்வையாக்கப்பட்ட மண் சேர்த்து குழைக்கப்பட்ட களிமண்ணை வேண்டிய உருவத்தில் செய்து, அதனை சூளையில் இட்டு உயர்ந்த வெப்பநிலைக்குச் சூடாக்கி மட்பாண்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

இவ்வாறு சூடாக்குவதன் மூலம் களிமண் இறுகுதல், பலம் கூடுதல், வடிவம் உறுதியாதல் போன்ற நிரந்தரமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. மட்பாண்டங்கள் செய்வதற்கு பயன்படுத்தப்படும் களிமண் இடத்துக்கு இடம் வேறுபடுவதால் அவ்விடங்களில் செய்யப்படும் மட்பாண்டங்கள் தனித்துவமான இயல்பைக் கொண்டவையாகும். கொழும்புக்கும் கண்டிக்கும் இடையயேயுள்ள மால்கொட களிமண் தயாரிப்புகளுக்கு பிரசித்தி பெற்ற இடமாகும்.

இக்கலை இந்தோனேஷியாவில் இருந்து பெறப்பட்டு இலங்கையின் பிரத்தியேகமான அழகு தோற்றத்தால் மேம்படுத்தப்பட்டு தனித்துவமான சிறப்பைப் பெற்றுள்ளது. நாடு முழுவதும் பரந்து காணப்படும் இக்கலை நுட்பத்தின் ஆக்கபூர்வமான வடிவமைப்புகள் சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்துள்ளது. பதிக் வண்ணமயமான பூவணி வழிபாடுகளையும் பாரம்பரிய மற்றும் இன்றைய காலத்தோடு இணைந்த வடிவமைப்புகளையும் கொண்டுள்ளது.

இதனைத் தயாரிக்கும் முறையில் முதலில் நிறம் ஊட்டப்பட்ட மெழுகு பதியம் ஆடையில் பூசப்பட்டு காயவிடப்படும். அடுத்து ஆடையிலிருந்து காய்ந்த மெழுகு உரித்து எடுக்கப்பட்டு ஆடை கொதிக்க வைக்கப்படும். இந்த முறையில் ஆடையை நிறமூட்ட ஹைட்ரோக்ளோரிக் எனும் அமிலம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தீர்மானிக்கப்பட்ட வடிவம் வரும்



வரை இம்முறை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.


இக்கலை இலங்கையர் மட்டுமல்லாது சுற்றுலாப் பயணிகளின் மனங்களில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நாம் இவற்றையெல்லாம் சாதாரண கைத்தொழிலாகப் பார்க்கின்றோம். ஆனால், இவை திறமைகளை வெளிப்படுத்தும் கலைகள் ஆகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# அதிகாரங்களின் மனச் சாட்சியை தொந்தரவு செய்யும் இறந்தவர்கள்

## பொலிஸாரின் செயற்பாடு இதையே காட்டுகிறது என்று சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்



இறந்தவர்கள் எந்த அளவுக்கு அதிகாரங்களின் மனச் சாட்சியைத் தொந்தரவு செய்கிறார்கள் என்பதையே தற்போதைய பொலிஸாரின் செயல் காட்டுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் நீதிபதி சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் கண்டனம் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக அறிக்கையில் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

'நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை, பொலிஸார் இழுத்துச் சென்று பொலிஸ் வாகனத்தில் அழைத்து ச் செல்லும் காணொலி காட்சியை நானும் பார்த்தேன்.

இறந்தவர்களை நினைவுகூரும் விழாவில் அவர் பங்கேற்றார் என்று கூறப்படுகிறது.

அதாவது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்ஒருபொதுவான குற்றவாளியைப் போல பொலிஸாரால் இழுத்துச் செல்லப்படுகின்றமை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

மேலும், எனக்குத் தெரிந்த வரை நாம் இறந்தவர்களை நினைவில் கொள்ள முடியாது என்று எந்தச் சட்டமும் இல்லை.

இதேவேளை பொலிஸாரின் இந்தச் செயல், இறந்தவர்கள் எந்தஅளவுக்குஅதிகாரங்களின் மனச்சாட்சியைத் தொந்தரவு செய்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

இறந்த ஆவிகளால் தொந்தரவு இல்லாமல் அமைதியாக தூங்குவது அவர்களுக்கு கடினமாக இருக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக திலீபன் அமைதியான சத்தியாகிரியாக இருந்தார். அவர் உன்னத காரணங்களுக்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். உன்னத காரணங்களுக்காக இறந்த ஓர் அமைதியான எதிர்ப்பாளரை மக்கள் நினைவு கூர்கின்றமை பற்றி அரசாங்கம் ஏன் கலங்குகிறது?

மேலும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய ஆத்திரமூட்டும் செயல்கள், மக்களுக்கு பயத்தை ஏற்படுத்தும் என்று அரசாங்கம் நினைத்தால் அவர்களே ஏமாற்றப்படுவார்கள்.

அதாவது இவ்வாறான செயற்பாடுகள் இந்த நாட்டில் அரசியல் சுயநிர்ணயத்திற்காகப் போராடுவதற்கு மக்களை மேலும் உறுதியளிக்கும்.

இதேவேளை இறந்த வீரர்களை நினைவுகூருவதற்கு மக்களுக்கு எதிராகத் தடை உத்தரவு பிறப்பிக்கும் முன் நீதிமன்றங்கள் மிகவும் கவனத்துடன் இருக்கும் என்று நம்புகிறேன்.

கொரோனா கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்' என சி.வி.விக்னேஸ்வரன் தனது ஊடக அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பி.சி.ஆர். சோதனை மையம்



வெளிநாடுகளிலிருந்து இலங்கை வருவோருக்கு நேற்று (சனிக்கிழமை) முதல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

3 மணித்தியாலங்களில் பி.சி.ஆர் .பெறுபேற்றை பெற்று கொடுக்கும் நோக்கில் அண்மையில் மத்திய நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரண துங்க தெரிவித்துள்ளார். மேலும், இந்த ஆய்வுக் கூட கட்டமைப்பின் ஊடாக மணித்தியாலத்துக்கு 500 பி.சி.ஆர். முடிவுகளையும் நாளொன்றில் 7 ஆயிரம் முடிவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்த பரிசோதனைகளுக்காக சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து 40 டொலர் கட்டணம் அறவிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கறுப்புக் கொடிப் போராட்டம் அறிவிக்க தயாராகவுள்ளோம்

## மீனவர்கள் எச்சரிக்கை

அம்பாறை – அட்டாளைச்சேனை பிரதேச மீனவர்கள் படகு மீதேறி போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

மேலும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அம்பாறை மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வை முன்வைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அட்டாளைச்சேனை கடற்கரையில் இந்தப் போராட்டத்தை மீனவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

சட்டவிரோதமான சுருக்கு வலை பாவனை எங்களின் பிரதேசத்தில் அதிகரித்துள்ளது.

அவ்வாறு சட்டவிரோத செயலைச் செய்பவர்களுக்கு உதவும் விதமாக மீன்பிடித் திணைக்கள பிராந்திய உதவிப் பணிப்பாளர் செயற்பட்டு வருகிறார். சட்டநடவடிக்கைகளின் போதும் அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார்.

அதாவது, உதவிப்பணிப்பாளர் கூறும் விடயங்களை ஏற்றுக்கொள்ளாமல் மீனவர்களின் பக்கம் நின்று எவ்வித கையூட்டல்களுக்கும் சோரம் போகாத அதிகாரி எஸ்.பாபுவை இடமாற்றம் செய்துள்ளார்கள். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவரது இடமாற்றத்தை ரத்துசெய்து அறிவிக்க மீன்பிடி அமைச்சர் உடனடியாக முன்வரவேண்டும். வடக்குக்கு சிறந்த முறையில் சேவை யாற்றும் அமைச்சர் டக்ளஸ், இனி வரும் காலங்களில் கிழக்கிற்கும் நிறைவான சேவையை முன்கொண்டு செல்லவேண்டும். இந்த விடயம் தொடர்பில் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசால் காஸிமிடம் பேசியுள்ளோம்.

மேலும், நிரந்தரமானத் தீர்வை வழங்காது விட்டால் மீன்பிடியை நிறுத்திவிட்டு கறுப்புக்கொடி போராட்டத்தை அறிவிக்கத் தயாராக உள்ளோம். – என மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# அதிபர் ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் சமயத் தலைவர்களிடம் மகஜர் கையளிப்பு







-கேதீஸ்-

அதிபர் ஆசியர் சேவையில் உள்ளவர்களின் சம்பள முரண்பாடு கடந்த 24 வருடங்களாக நிலவிவருகின்றது. இதற்கு இதுவரை தீர்வு காணப்படாமைக்கு எதிராக மேற்கொள்ளும் தொழில் சங்க நடவடிக்கை தொடர்பாக சமயத் தலைவர்களுக்கும் தமது கோரிக்கை மகஜரினை கடந்த வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

கல்முனை ஸ்ரீ மங்களராமய விகாராதிபதி வணக்கத்துக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்தின தேரர் மற்றும் சிவஸ்ரீ சச்சிதானந்த சிவம்குருக்கள், கல்முனை பங்குத்தந்தை ஏ.தேவதாசன் ஆகியோரிடம் இந்த மகஜர்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த மகஜர் கையளிப்பின்போது இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எம.எஸ். சத்தார் ,மாவட்டத்தின் ஆசிரியர் சேவை சங்க உறுப்பினர்களான ஆசிரியர் சி.எஸ். முஸமில், ஆசிரிய ஆலோசகர்களான கே.சாந்தகுமார், எம்.லக்குணம், எஸ்.சிவசுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த மகஜரில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், அதிபர் சேவை சங்கம், அகில இலங்கை தேசிய ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், சுயாதீன கல்வி சேவை சங்கம், இலங்கை முற்போக்கு ஆசிரியர் சங்கம் ஒன்றிணைந்த ஆசிரியர் சேவை சங்கம், இலங்கை தேசிய அதிபர் சங்கம் உட்பட 22 பொதுச் சங்கங்கள் கையொப்பம் இட்டுள்ளன.



# பொது அறிவு வாராந்தம் ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.
சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகிய வற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**1. ஒரு குழுவிலுள்ள 05 பேர் தமக்கிடையே கைக்குலுக்கிக் கொண்டனர். அவர்கள் அனைவருமே பரிமாறிக்கொண்ட கைகுலுக்கல்களின் எண்ணிக்கையாது?**
**2.வாகனதரிப்பிடத்தில் சைக்கிளும், ஓட்டோவுமாக மொத்தம் 37 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 92 எனில் அங்குள்ள சைக்கிள்களின் எண்ணிக்கையாது?**
**3.தந்தையின் வயது மகனின் வயதைப்போல் 4 மடங்காகும் அவர்கள் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 55 எனில் தந்தையின் வயது யாது?**
**4. ராஜா என்பவரிடம் ரூ.24 இருந்தது அவர் கமலுக்கு ரூ.4 ஐ கொடுத்தால் இருவரிடமும் இருக்கும் பணம் சமனாகும் எனின் கமலிடம் ஆரம்பத்திலிருந்த பணம் யாது?**
**5. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை எனில் நாளைமறுதினம் என்ன கிழமையாகும்?**
**6. தற்போது நடைபெறும் ஐ.பி.எல். தொடரில் நடப்புச் சம்பியன் எவ்வணியாகும்?**
**7. இவ்வருட உலகக்கிண்ண ரி-20 போட்டி எப்போது ஆரம்பமாகவுள்ளது?**
**8. நடைபெறும் ஐ.பி.எல். தொடரில் விளையாடும் இலங்கை வீரர்கள் யாவர்?**
**9. 5, 7, 15, 33, 65.... என்ற எண்தொடரின் அடுத்து வரும் இரு எண்களும் எவை?**
**10. தற்போது உலகில் கொரோனா வைரஸ் பாதித்த நாடுகளில் முதல் இடத்தில் உள்ள நாடு எது?**

**பெயர் :- ...........................................**
**முகவரி :- ...........................................**
**தொலைபேசி இலக்கம்:- .....................**
**அடையாள அட்டை:- ........................**
**மின்னஞ்சல் முகவரி:- ......................**

## 19.09.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

1. 4
2. 0.75cm
3. பச்சை
4. மேற்கிந்தியத் தீவுகள்
5. 8 சுற்றுக்கள்
6. 12
7. டேனில் மெட்வடேட்
8. 223, 367
9. 2.2 கோடி
10. 4

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | |
|---|---|---|
| 1. எஸ். சதுர்ஜினி | அல்வாய் | 10 |
| 2. வி.வினோத்குமார் | மட்டக்களப்பு | 10 |
| 3. வி.வினோதினி | மட்டக்களப்பு | 10 |
| 4. கே. டிருஷி | புத்தளம் | 10 |
| 5. ஐ. கார்த்திகன் | யாழ்ப்பாணம் | 09 |
| 6. எஸ். கருணாநிதி | யாழ்ப்பாணம் | 09 |
| 7. கே. அனுஷன் | ஏழாலை | 08 |
| 8. ஜெ. வினோஜன் | குடத்தனை | 07 |
| 9. ரி. சராதரன் | குப்பிளான் | 07 |
| 10. கே. ஸ்ரீதரன் | கொழும்பு | 07 |

# தேசிய வளங்கள் வெளிநாடுகளுக்கு அரசின் கீழ் விற்பனை செய்யப்படாது

## ரோஹித அபேகுணவர்தன உத்தரவாதம்



இந்த அரசாங்கத்தின்கீழ் தேசிய வளங்கள் ஒருபோதும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படமாட்டாது. என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

எனினும், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு முதலீடு அவசியம். அதற்கான வாய்ப்பை வழங்குவது தவறான நடவடிக்கை அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இல்லாத விடயமொன்றை உருவாக்குவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. நாட்டு வளங்களை விற்பதற்கான நிகழ்ச்சி நிரல் எம்மிடம் இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுகின்றன என முன்வைக்கப்படும் குற்றச் சாட்டுகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# யோஹானியின் சாதனையை கௌரவிக்கவுள்ளது அரசு



'மெனிக்கே மகே ஹிதே' பாடலின் மூலம் பிரபல்யமான இலங்கை பாடகி யோஹானியின் சாதனையை அரசாங்கம் பாராட்டி கௌரவிக்கவுள்ளது.

இந்தப் பாடல் உலகளாவிய ரீதியில் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளதுடன், தற்சமயம் யூடியூபில் 12.3 கோடிக்கும் அதிகமான பார்வைகளைப் பெற்றுள்ளது.

இந்த சாதனையை உள்ளூர் ரசிகர்கள் மற்றும் கலைஞர்கள் மட்டும் அல்லாது உலகளாவிய ரீதியிலுள்ள பிரபல்யமான கலைஞர்களும், ரசிகர்கள் ஏனைய முக்கியஸ்தர்களும் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த வெற்றிக்காக யோஹானியையும் சதீனையும் இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கத் தவறியமை குறித்து சமூக ஊடகங்களில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளிக்கும் வகையில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் -

கொவிட் - 19 சூழ்நிலையின் விளைவால் எந்த பொது நிகழ்வினையும் நடத்த முடியாது சூழ்நிலை உள்ளது. எவ்வாறாயினும் யோஹானியின் சாதனையை அரசாங்கம் அங்கீகரிக்கும் அதே வேளையில், கொவிட் - 19 தடுப்பு நிலைமை மேலும் முன்னேற்றம் கண்டவுடன் முறையான பாராட்டு நிகழ்வு நடைபெறும் என்று கூறினார்.

# எரிபொருளுக்காக இந்தியாவிடம் கடன் பெற இலங்கை பரிசீலனை

கொழும்பு, செப். 26

எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக இந்திய அரசாங்கத்திடமிருந்து 50 கோடி டொலர் கடனைப் பெற அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

இராஜதந்திர மட்டத்தில் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் டொலர் பற்றாக்குறை காரணமாக எரிபொருள் கொள்முதலில் நெருக்கடி உள்ளது. இதற்காக எரிசக்தி அமைச்சகம் முன்பு பல நாடுகளுடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தது.

எனினும், இந்தியாவில் இருந்து குறித்த கடன் தொகையை பெறுவதற்கான நிபந்தனைகள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை என்று அரசாங்கத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மட்டக்களப்பில் மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து ஆய்வு



ஜனாதிபதியின் 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதியின் 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு திருப்பெருந்துறை வீதியில் சகல வசதிகளும் கொண்ட நடைபாதை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கையை நகர அபிவிருத்தி அதிகாரசபை முன்னெடுத்து வருகின்றது.

100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் சிபாரிசுக்கு அமைவாக இந்த நடைபாதை அமைக்கப்படவுள்ளது.

இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயும் வகையில் இந்தக் கலந்துரையாடல் மட்டக்களப்பு மாநகர சபையில் மாநகர முதல்வர் தி. சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் மட்டக்களப்பு மாநகர சபையின் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு திருப்பெருந்துறை வீதியில் சுமார் 300 மீற்றர் தூரம் இந்த நடைபாதை பொழுதுபோக்கு அம்சங்களுடன் சுமார் 1.8 கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கான அனைத்து விதமான உதவிகளையும் மாநகரசபை வழங்கும் எனவும் இதன்போது மாநகரசபை முதல்வர் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

**தியாகி திலீபனின் 34 ஆவது ஆண்டு நினைவு தினம் உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களால் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'ஆனந்தவிகடன்' சஞ்சிகையில் திலீபன் குறித்து வெளியான கட்டுரை அவரின் நினைவையொட்டி இங்கு மறுபிரசுரமாகின்றது.**



# காந்தி தேசத்துக்கே காந்தியம் போதித்தவன்!

"நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன்."
– திலீபன்

இன்றிலிருந்து சரியாக 34 ஆண்டுகளுக்கு முன்பாக, உலகின் தென்கிழக்கு மூலையில் 23 வயது இளைஞன் ஒருவன் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்தான். அவனுக்குப் பெற்றோர் இட்ட பெயர் பார்த்திபன். இயக்கம் தந்த பெயர் திலீபன். ஆம், பெயரின் மூலம் சாதி, மதம், பிராந்தியம் அறிந்து அதன் மூலம் சிறு பிரிவு ஏற்படா வண்ணம், தமிழ்ப்பெயர் சூட்டிக்கொள்ளும் கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிறைந்ததொரு இயக்கத்தின், பிராந்திய அரசியல்துறை பொறுப்பாளன். உண்ணா நோன்பு என்றாலே நகைப்புக்குரிய ஒன்றாக மாறிவிட்ட இக்காலச் சூழலில், கொண்ட கொள்கைக்காக சொட்டு நீர் அருந்தாமல் உயிர் துறந்து, உலகத்தின் செவிப்பறைகளில் உண்ணா நோன்பின் மகத்துவத்தை ஓங்கி ஒலித்தவன் அவன். பிறந்த மூன்றே மாதத்தில் தன் தாய்மடி இழந்தவன், 23 வயதில் தன் தாயகத்தின் மடியில் உயிர் துறந்தான்.

எதற்காக, ஏன், எப்படி?

சிங்கள ஆட்சியாளர்களிடம் அடிமைப்பட்டிருந்த தன் தாய் நிலத்தை, தன் இன மக்களை மீட்கும் போராட்டத்தில் சின்னஞ் சிறுவயதிலேயே, தன்னை இணைத்துக்கொண்டான். ஏற்கெனவே ஓர் இனத்தின் கொடுமையை, ஆதிக்கத்தைத் தாங்கமுடியாமல் துயருற்ற நேரத்தில், இரு இனங்களுக்கிடையே சுமுக உறவை உண்டாக்க இந்தியப் பெருநிலத்திலிருந்து, வந்த அமைதிப்படையின் ஆதிக்கமும் சேர்ந்துவிட செய்வதறியாது திகைத்தனர் ஈழத்தமிழ் மக்கள்.



போராட்டக் குழுக்களுக்கிடையிலும் பெரும் குழப்பங்கள்.

இப்பெரிய தேசத்தை எதிர்த்து நிற்பதா? சரணடைவதா? இல்லை அவர்கள் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு மண்டியிடுவதா?

கொடுப்பதைப்பெற்றுக்கொண்டு மண்டியிடுவதற்கா இத்தனை ஆண்டுக்காலப் போராட்டம்? தம் முன்னோர் முப்பதாண்டுக்கும் மேலாக அமைதி காத்ததன், அறவழியில் போராடியதன் விளைவுதான் என்ன?

என்ன மிஞ்சியது, நில உரிமை இல்லை, வரி வசூல் செய்யும் உரிமை இல்லை, காவல்துறை அதிகாரம் இல்லை , கல்வி உரிமையில் பாகுபாடு... எனில் அவர்கள் கொடுக்கும் மாகாண முதல்வர் எனும் அதிகாரத்தால் என்ன செய்துவிட முடியும், கூடுதலாகக் கொடுக்கும் அடக்குமுறைகள் வேறு. அதற்குப்பிறகுதான் ஈழத் தமிழ் இளைஞர்களின் கையில் ஆயுதம் வந்து சேர்ந்தது. சிங்களப் படையின் ஆயுதங்களுடன் நேருக்கு நேர் மோதியது.

அத்தகைய சூழலில்தான் இந்தியப்படை ,அமைதியை நிலைநாட்ட ஈழ மண்ணுக்குள் நுழைந்தது.

அமைதி ஒப்பந்தம் என்கிற பெயரில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைகள் பறிபோக மீண்டும் ஓர் ஒப்பந்தம் கையொப்பமானது. ஈழ மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவும் நிர்பந்திக்கப்பட்டனர். அதை மறுத்த காரணத்தால், அமைதியை நிலைநாட்ட வந்தவர்கள் தந்த ஆயுதங்களும் ஈழத் தமிழ் மக்களை கொன்றொழிக்க, அவர்களுக்கு, அவர்களின் வழியிலேயே பதில் சொல்லத் துணிந்தான் திலீபன். உண்ணா நோன்பு, அஹிம்சை வழி என மகாத்மா காந்தி இவ்வுலக்கு விட்டுச் சென்ற போராட்ட வழிமுறையை கையிலெடுத்தான்.

"கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்க மாட்டேன். மருத்துவப் பரிசோதனை செய்யக் கூடாது. நான் உணர்வு இழந்தபிறகும் வாயில் தண்ணீர் ஊற்றக் கூடாது. இறக்கும் வரை எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது."
– திலீபன்

✦ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

✦ புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

✦ இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

✦ வடகிழக்கு மாகாணங்களில், காவல் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

✦ இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், ஊர்க்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

- என்ற ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நல்லூர் முருகன் ஆலயத்துக்கு முன்பாக 1987 ஆம் ஆண்டு செம்டெம்பர் 15 ஆம் திகதி உண்ணா நோன்பைத் தொடங்கினான் திலீபன்.

"திலீபன் அழைப்பது சாவையா, இந்தச் சின்ன வயதில் இது தேவையா?" எனும் சோக முழக்கங்களோடு, கூட்டம் கூட்டமாக திலீபனைக் காணவந்தனர் ஈழத்தமிழ் மக்கள். தான் அங்கம் வகித்த இயக்கத்தின் தலைவர், இந்த உண்ணாவிரதம் வேண்டாம் என்று சொல்ல –

நமது கொள்கையின் தீவிரத்தை நிரூபிக்க இதை விட்டால் வேறு வழியில்லை. நாம் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்பதை ஈழ மக்களுக்கும் தமிழக மக்களுக்கும், உலகத் தமிழர்களுக்கும் சொல்லவேண்டிய தருணம் இது. இன்னொரு இராணுவம் எங்கள் மண்ணில் நிலைகொள்வதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதையும் அழுத்தமாகச் சொல்லவேண்டிய தருணம். அதையும் இந்தியாவின் வழியிலேயே சொல்ல உண்ணாவிரதம்தான் ஒரே வழி என்று பதில் சொன்னான்.

திலீபனின் உண்ணா நோன்பு அஹிம்சை தேசத்து ஆட்சியாளர்களின் காதில் விழாததால், அவனின் கோரிக்கை ஏற்கப்படாததால், காந்திய தேசம்தானே, காந்திய வழிப் போராட்டத்தை ஏற்பார்கள் என அவன் கொண்டிருந்த நம்பிக்கை சிதைக்கப்பட்டதால், பன்னிரண்டாம் நாள் (26.9.1987) மண்ணை விட்டுப் பிரிந்தான் தியாகி திலீபன்.

அவன் மறைந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகும், அவன் முன்வைத்த அதே ஐந்து அம்சக் கோரிக்கைகள் உட்பட ஆறு அம்சக் கோரிக்கைகளோடு, 'எழுக தமிழ் எழுச்சிப் பேரணி' என்கிற பெயரில் பல்லாயிரக்கணக்கான ஈழ மக்கள், யாழ்ப்பாண மண்ணில் போராட்டம் நடத்தினர். ஈழ மண்ணில் மட்டுமல்லாது, இனப்படுகொலைக்கு நீதி கேட்டு உலகெங்கும் பேரணிகள் நடந்தன.

ஆயுதப்போராட்டம்தான் ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்குத் தடையாக இருக்கிறது எனப் பேசியவர்கள், அது கைவிடப்பட்டு பத்தாண்டுகள் ஆன பின்பும் அதே நிலை நீடிப்பது குறித்து வாய் திறக்காமல் மௌனியாக இருக்கிறார்கள். எனில், அங்கே அமைதிக்குத் தடையாக ஆயுதமோ அஹிம்சை வழிப் போராட்டங்களோ இல்லை என்பது நிரூபணமாகிறது. மறுக்கப்படும் உரிமைகள்தான் அம்மக்களை மீண்டும் மீண்டும் போராடத் தூண்டுகிறது என்பதும் புலப்படுகிறது.

பார்த்திபன் இப்போது மட்டுமல்ல, ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளும் அவர்களுக்கான நீதியும் மறுக்கப்படும் காலம் வரைக்கும் பசியோடுதானிருப்பான்... பசியோடுதானிருப்பான்.



"நான் இறப்பது நிச்சயம். அப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து நமது இலட்சியத்துக்காக உழைப்பேன்."
– திலீபன்







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

# வடக்கு – கிழக்கு எம்.பிக்களை இணைக்கும் முயற்சியில் முஸ்லிம், மலையக உறுப்பினர்களையும் சேருங்கள்!

## ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள்

(வவுனியா நிருபர்)

**வடக்கு – கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைக்கும் முயற்சியை வரவேற்கின்றோம். இதில் முஸ்லிம் மற்றும் மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைக்க வேண்டும்.**

**– இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**



வவுனியாவில் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தவத்திரு அகத்தியார் அடிகளாரும் திருகோணமலை மாவட்ட ஆயரும் இணைந்து வடக்கு, கிழக்கில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து எங்களுடைய மக்களது பிரச்சினைகளை ஒருமித்த நேர்கோட்டில் கையாள்வதற்கான முயற்சியை ஆரம்பித்துள்ளனர் என்று அறியமுடிகின்றது. அந்தவகையில் அதனை நாம் வரவேற்கின்றோம். எங்களது மக்கள் கழுத்தளவில் பிரச்சினைகளைத் தாண்டி திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒற்றுமை முக்கியம் என்ற அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி எங்களது இனத்தின் பிரச்சினையை ஒற்றுமையாக உலகத்துக்குச் சொல்லுகின்ற ஒரு வாய்ப்பை இந்த முயற்சி ஏற்படுத்தும். ஆயரும் அடிகளாரும் இணைந்து ஒரு அமைப்பாக இத னைச் செய்து இருப்பதாக அறியக்கிடைக்கின்றது.

இந்த விடயத்தில் ஆலோசனை ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். வடக்கு – கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம் சகோதரர்களுடைய பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்காக அவர்களது தேசிய பிரச்சினையை வெளிக்கொண்டு வரும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை அல்லது முஸ்லிம் தலைவர்களை இணைத்துக்கொள்ள வேண்டும் என்பது எனது ஆலோசனை. இரண்டாவது மலையகம் சம்பந்தமாக மக்கள் படுகின்ற துன்பங்களை வெளியில் கொண்டு வருகின்ற மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் இந்த விடயத்தில் உள்வாங்க வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைக்கின்றேன்.

இந்த முயற்சியை நான் வரவேற்கின்றேன். ஒற்றுமையாக எங்களுடைய மக்களது பிரச்சினைகளை வெளியுலகுக்குக் கொண்டு வருகின்றபோது அது மக்கள் சக்தியாகப் பார்க்கப்படும். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலமையை உண்டு பண்ணும். இது தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். அந்தவகையில் இந்த முயற்சிக்கு எங்களுடைய ஆதரவையும் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார். (100)

## வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 88 வீதமானவர்களுக்கு 2 டோஸ் தடுப்பூசிகள்!

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட 88 வீதமானவர்கள் இரண்டு டோஸ் கொரோனாத் தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் நாடு பூராகவும் மூத்த பிரஜைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை அரசு முன்னெடுத்துள்ளது.

அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 88 வீதமானவர்கள் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர். ஏனையவர்கள் அடுத்து வரும் நாட்களில் தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களுக்குச் சென்று தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

அத்துடன், 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 72 வீதமானவர்கள் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர் எனவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (100)

## வவுனியா விபத்தில் மூவர் படுகாயம்!



(வவுனியா நிருபர்)

வவுனியா, ரயில் நிலைய வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரில் இருந்து ரயில் நிலைய வீதி ஊடாகச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும், சைக்கிள் ஒன்றும் கட்டுப்பாட்டை இழந்து ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும், சைக்கிளில் பயணித்த முதியவர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

மூவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன், விபத்து குறித்து வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## எமக்குள் ஒற்றுமை இல்லை என்று மக்களுக்குக் காட்ட விரும்பவில்லை

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கூறுகின்றார்

(வவுனியா நிருபர்)

எங்களுக்கும் வரலாறு இருக்கின்றது. அதனை நாம் கூற முடியும். ஆனால் எங்கள் மக்கள் பாரிய அழுத்தங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருகிறார்கள். எங்களுக்குள் ஒற்றுமை இல்லை எனக் காட்டினால் மக்கள் மனமுடைந்து மிகவும் மோசமான நிலைக்கு செல்வார்கள்.

– இவ்வாறு ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஐ.நாவுக்கு அனுப்பிய கடித விவகாரத்தால் தமிழரசுக் கட்சியுடன் ஏற்பட்டுள்ள கருத்து மோதல் குறித்து வவுனியாவில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய பொறுப்பு எங்களையும் சார்ந்திருக்கிறது. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிப்பட்ட கட்சிகள் பங்கு எடுக்க முடியாது. இது விடுதலை சம்பந்தமாக உருவாக்கப்பட்ட அமைப்பு. அந்த அமைப்பை சிதைப்பதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது.

எமது மக்கள் பாரிய பிரச்னையை தாங்கிக் கொண்டு திண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த நிலையில் மாறி மாறி நாங்கள் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களைப் பற்றி பல கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் கூட அதற்கான விளக்கத்தை எங்களாலும் சொல்ல முடியும் என்பது உண்மையான விடயம்.

எங்கள் இயக்கத்துக்கும் ஒரு வரலாறு இருக்கின்றது. அந்த வரலாற்றையும் நாங்கள் சொல்ல முடியும். அதற்கான காரணங்களையும் சொல்ல முடியும். எங்கள் மக்களுக்காக, அவர்களது விடுதலைக்காக நாங்கள் துப்பாக்கி தூக்கியவர்கள்.

எப்பொழுதும் எங்களது சிந்தனை மக்களது விடுதலைக்காக இருக்கவேண்டும் என்பதே. ஆகவே, மாறி மாறி தனிப்பட்ட எதிர் கருத்துக்களை சொல்வதன் மூலம் மக்கள் வெறுப்படையும் தன்மை உள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றுமை இல்லாத காரணத்தால் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றோம். வடக்கு – கிழக்கில் தேசியத்தோடு நிற்பவர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் கூட, தென்னிலங்கை கட்சிகளைச் சார்ந்து இருக்கும் தமிழர்களுக்கும் கூடுதலான ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன . இதிலிருந்து மக்கள் நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்ற செய்தியை சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, பதிலுக்குப் பதில் சொல்லாமல் விடுவதால் நாங்கள் அவர்கள் சொல்லும் விடயங்களுக்கு ஒத்துப்போவதாக யாரும் கருதிவிட முடியாது.

எங்களுக்கும் வரலாறு இருக்கின்றது. பதில் சொல்ல முடியும். மக்கள் காணியில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோர் வரை பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். அது சம்பந்தமாக செயற்படுவதற்கான முயற்சியை நாம் மேற்கொண்டு வருகின்றோம். அந்தவகையில் மாற்று கருத்துக்களுக்கு நாங்கள் பதில் சொல்லவேண்டிய தேவையில்லை.

எவரெவர் எப்படி செயற்படுகிறார்கள் என்று மக்களுக்குத் தெரியும். அதனை மக்கள் முடிவு எடுக்கட்டும். எதற்காக நாங்கள் போராட்டத்தை மேற்கொண்டோமோ அதே சிந்தனையுடன் எங்கள் தலைவர்கள் விட்டுச் சென்ற பணியை செய்வோம்.

எங்கள் மக்கள் பாரிய அழுத்தங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருகிறார்கள். எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என காட்டினால் மக்கள் மனமுடைந்து மிகவும் மோசமான நிலைக்குச் செல்வார்கள். எங்கள் மீது உள்ள நம்பிக்கை சிதைக்கப்படும்போது சிங்கள கட்சிகளுடன் போகும் நிலையையும் உருவாகும். அதனால் நாம் மௌனம் காப்பது எங்கள் மீதான கருத்துக்களை ஏற்றுக் கொண்டோம் என்பது அல்ல – என்றார். (100)

காலைக்கதிர்
Kalaikkathir

# சிறிதரன் எம்.பியின் அலுவலகம் பொலிஸாரால் சுற்றிவளைப்பு!

## வடக்கில் தொடரும் அரச படைகளின் அடாவடி

**கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் அலுவலகமான அறிவகம் பொலிஸாரால் நேற்று முற்றுகையிடப்பட்டது.**

**அலுவலகத்துக்கு வந்து செல்லும் அனைவரும் பொலிஸாரால் அடாவடி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.**





அலுவலகத்துக்கு உள்ளே எவரையும் உள்ளே செல்ல விடாமல் பொலிஸார் தடுத்தனர் எனவும், கரைச்சி, பளை பிரதேச சபையின் தவிசாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்திக்க உள்ளே சென்றபோது பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

குறித்த பொலிஸாரிடம், ஏன் இவ்விடத்தில் நிற்கிறீர்கள்? எனது அலுவலகத்துக்கு வருவோருக்கு ஏன் தடையை ஏற்படுத்துகிறீர்கள்? என்று சிறிதரன் எம்.பி. பொலிஸா ரிடம் கேட்டதற்குப் பதிலளித்த பொலிஸார், இதுமேலிடத்து உத்தரவு என்று கூறினர்.

### இளையோர்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்களின் தாயகமான வடக்கு – கிழக்கில் காலம் காலமாக அரசுகள் மேற்கொண்டு வரும் நில அபகரிப்பை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டும் 'தாய் நிலம்: நில அபகரிப்பு – இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந் தொற்று' என்ற ஆவணப் படம் நேற்று மாலை இலங்கை நேரப்படி 5.30 மணிக்கு (இலண்டன் நேரம் பிற்பகல் 1.00 மணி, டொரண்டோ மற்றும் நியுஜேர்சி நேரம் காலை 8 மணி) இணைய வழியில் திரையிடப்பட்டது. அதன்பின்னர் அந்தப் படம் தொடர்பான ஆய்வு ரீதியான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் பிரித்தானியா, தமிழ் நாடு மற்றும் புலம்பெயர் நாடுகளில் இருந்து இளையோர்கள் கலந்துகொண்டார்கள். இந்த நிகழ்வை நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனுடன் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கூட்டாக ஆரம்பித்துவைத்தார்கள். இதில் விக்னேஸ்வரன் எம்.பி. தலைமையுரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு போல் கொரோனா வைரஸும் எம்மைத் தலையெடுக்கவிட விருப்பமில்லை. எம்மை எப்படியாவது அடக்க வேண்டும், கட்டுப்படுத்த வேண்டும், தடை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அதுவும் இயங்கி வருகின்றது.

எனினும் கட்டுப்படுத்தல்களையும் தனிமைப்படுத்தல்களையும் மீறி நாங்கள் இன்று புகழ் மிக்க அறிஞர்களை இந்த மெய் நிகர் தொடர் கருத்தரங்கத்துக்கு வரவழைத்துப் பங்குபற்ற வைத்திருக்கின்றோமெனில் அதற்கு எமது விடா முயற்சியுடைய சோர்வற்ற இளைஞர் குழாமே பொறுப்புடையவர்கள். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!

இன்றைய நாள் மிகவும் முக்கியமான ஒரு நாள். இந்த நாட்டின் பூர்வீகக் குடி மக்களில் ஒன்றான தமிழ் மக்களின் வடக்கு – கிழக்கு தாயகத்தை கடந்த 70 வருடங்களாக அபகரித்துவரும் தொடர் இலங்கை அரசுகளின் செயற்பாடுகளை ஆவணப் படமாக ஆதாரபூர்வமாக ஆய்வுபூர்வமாக வெளியிடும் நாள் இது. இவ்வாவணப் படம் நில அபகரிப்பு நடக்கும் இடங்களில் வைத்தே எடுத்த படம். இதனை நாம் என்றோ செய்திருந்திருக்க வேண்டும். இது போன்ற ஆவண படங்கள் பலவற்றை நாம் வெளியிட்டிருந்திருக்க வேண்டும். ஆனால், காலம் கடந்தேனும் அவசியமும் முக்கியமுமான இந்த செயற்பாடு இன்று அரங்கேற்றம் பெறுவது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது.

அதேபோல், நில அபகரிப்பு எவ்வாறு ஒரு பெருந்தொற்றாக வடக்கு – கிழக்கில் தமிழ் மக்களைப் பீடித்து அவர்களின் இருப்பு, அடையாளம், வாழ்வு ஆகியவற்றை இல்லாமல் செய்கின்றது என்பது பற்றி விவாதிப்பதற்கு உலகின் பிரபலயம் மிக்க கல்விமான்களும் செயற்பாட்டாளர்களும் இங்கு வந்திருப்பது மிகவும் முக்கியத்துவம் மிக்கது.

இத்தகைய சிறப்பும் முக்கியத்துவமும் மிக்க இன்றைய நிகழ்வினை என்னுடன் கூட்டாக ஆரம்பித்துவைத்து உரை ஆற்ற வந்திருக்கும் முதுபெரும் அரசியல் வாதியும் எனது பெருமதிப்புக்கும் கௌ ரவத்துக்கும் உரிய முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் என்னை 2013ஆம் ஆண்டு அரசியலுக்குக் கொண்டு வந்தவருமாகிய சம்பந்தனுக்கு எனது நன்றிகளை அடுத்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

வடக்கு – கிழக்கின் தலைநகரம் என்று அழைக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சம்பந்தன், எவ்வாறு 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின்னர் அங்கு பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் நிலங்கள் அரசின் குடியேற்றத்திட்டங்களினாலும் வன்முறைகளினாலும் பறிக்கப்பட்டு இன்று அவர்களின் இருப்பு கேள்விக்குறியாகும் நிலையில் இருக்கின்றது என்பதற்கு ஆதாரமாக விளங்குகின்றார். 1956 ஆம் ஆண்டு முதல் சாத்வீக வழியில் தமிழர் தாயகத்தின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிவரும் சம்பந்தன், இன்றைய நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து இங்கு கலந்துகொண்டிருப்பது சிறப்பானது. அவருக்கு மீண்டும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய தினம் ஆவண படம் தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட இருக்கும் இளையோர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும். நீங்கள் தான் எமது நம்பிக்கை நட்சத்திரங்கள். உங்களிடம் எமது மக்கள் நிறைய எதிர்பார்க்கின் றார்கள். உங்கள் செயற்பாடுகளை நிறுவனமயப்படுத்தி அறிவை ஆயுதமாகப் பயன்படுத்தி எமது விடிவுக்காக நீங்கள் நிறையவே சாதிக்க முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள் – என்றார்.

## 6 ஆண்டுகளுக்கு முன்பு உயிரிழந்தவருக்கும் நீதிமன்றத் தடை உத்தரவு பெற்ற பொலிஸார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.26

ஆறு ஆண்டுகளின் முன்பு உயிரிழந்தவர் தியாகி திலீபனின் நினைவு தினத்தைக் கொண்டாடக் கூடாது என முல்லைத்தீவு பொலிஸார் நேற்றுத் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன் ஆறு ஆண்டுகளின் முன்னர் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்திருந்தார். அவரது பெயரையும் குறிப்பிட்டு மேலும் மூவரின் பெயருடன் நால்வரது பெயரிலும் முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் தடை உத்தரவைப் பெற்றுள்ளனர்.

இந்தத் தடை உத்தரவை பெற்ற பொலிஸார் நேற்று அந்தக் கட்டளையை அவரது மகனான பீற்றர் இளஞ்செழியனிடம் சேர்க்க முற்பட்டனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த இளஞ்செழியன், தனது தந்தை உயிரிழந்து ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், தந்தையின் பெயரிலான ஓர் கட்டளையைத் தற்போது தன்னால் பெற்றிக்கொள்ள முடியாது என்று பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அது எனக்குரிய கட்டளை எனில் எனது பெயரில் இருக்க வேண்டும். அல்லது தந்தையின் பெயரில் கட்டளையானால் தந்தை அடக்கம் செய்யப்பட்ட இடத்தை உறுதிப்படுத்தி காட்ட முடியும், அங்கே ஒப்படையுங்கள் எனப் பொலிஸாருக்குப் பதிலளித்தார்.

## வவுனியாவில் மேலும் இருவர் கொரோனாத் தொற்றால் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

சுகயீனம் காரணமாக மரணமடைந்த இருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மரணமடைந்தவர்களின் சடலங்களைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

### கோட்டாபய நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷவுடனான சந்திப்பில், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அளித்த விளக்கங்கள் திருப்தியானதாக இல்லை என்பதால் ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேச முடிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பங்காளிக் கட்சிகளின் இடையூறு அடிக்கடி வருவதால் அதற்கு முடிவொன்றைக் காணும் வகையில் ஆளுங்கட்சி உயர்மட்டத்தில் மந்திராலோசனை நடத்தப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அதன் முதற்கட்டமாக, ஆளுங் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை இராஜிநாமா செய்யவைத்து, வெளியில் உள்ள முக்கிய பிரமுகர்களை உள்வாங்குவது, அமைச்சரவையில் மாற்றங்களை செய்வது உட்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன எனவும் சொல்லப்படுகின்றது.

எவ்வாறாயினும் ஜனாதிபதியுடான சந்திப்பு வெற்றியளிக்காத பட்சத்தில் அரசுக்குள் இருந்து சுயாதீன குழுவாக செயற்பட பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர் எனவும் அறியமுடிந்தது.

### இலங்கை - இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எல்லையில் சந்திக்கும் இரு நாட்டு கடற்படையின் மூத்த அதிகாரிகள் எல்லை தாண்டும் மீனவர்கள் பிரச்சினை, கடத்தல்கள், ஆள்கடத்தல்களைத் தடுத்தல் தொடர்பிலும் உரையாடவுள்ளனர்.

இதுவரை இடம்பெற்ற எல்லை தாண்டலினால் மீனவர்களிற்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் பட்டியலிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொடரும் ஊடுருவலினால் நாடுகள் எதிர்கொள்ளும் ஆட்புல ஒருமைப்பாடுப் பாதிப்பு மற்றும் தீவிரவாத செயல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் அதிக எதிர்பார்ப்பு நிலவுகின்றது என்றும் கூறப்பட்டது.